பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நாடுங்கள்
சன்சிகா நகைமாடம்
இல.114, பஸார் வீதி, வவுனியா.
தொலைபேசி: 024 222 4028

விழயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 26, வெள்ளிக்கிழமை 09.06.2017 | கதிர் 215

# ஜி.எஸ்.பி. சலுகை பறிபோகும்; இலங்கைக்கு எச்சரிக்கை!



## சிறுபான்மையினருக்கு எதிரான அத்துமீறல்களே காரணம்; ஜேர்மன் நாட்டுத் தூதுவர் ஜோன் ஒட்கே அபாயமணி

கொழும்பு, ஜூன் 09

ஏழு வருடங்களின் பின்னர் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை இலங்கைக்கு வழங்கப்பட்டிக்கும் நிலையில், அந்தச் சலுகை பறிபோகக் கூடிய நிலைமை உருவாகி வருவதாக ஜேர்மனியின் இலங்கைக்கான தூதுவர் ஜோன் ஒட்கே எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் சிறுபான்மையினருக்கு எதிராகப் பாரதூரமான மீறல்கள் இடம்பெறும் பட்சத்தில், ஜி.எஸ்.பி. வரிச்சலுகை திரும்பப் பெறப்படும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

பக்கம் 18 >>>

## ஞானசார தேரருடன் விக்கியை ஒப்பிடுவதா?

### அமைச்சர் ராஜித பரிகாசம்

கொழும்பு, ஜூன் 09

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், ஞானசாரதேரரைப்போன்று செயற்படவில்லை என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கும் பொழுதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சிறிய நாட்டில்

பக்கம் 18 >>>

## திருமுருகன் காந்திக்காக தொடர்ந்து போராடுவோம்!



### கஜேந்திரகுமார் உறுதி

(எஸ்.நிதர்ஷன்)

தமிழர்களுக்கு ஆதரவாக இந்தியாவில் மட்டுமன்றி சர்வதேசரீதியாகவும் குரல்கொடுத்த திருமுருகன் காந்தி விடுதலை செய்யப்படும் வரை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமி

பக்கம் 18 >>>

## காங்கேசன் சிமெந்து ஆலை மோசடி; கோட்டாபயவும் விசாரணையில்!

### முன்னாள் தளபதியின் சாட்சியத்தை அடுத்து



கொழும்பு, ஜூன் 09

காங்கேசன்துறை சிமெந்து ஆலையில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவிடம் விரைவில் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை

பக்கம் 18 >>>

## ரயிலுல் மோதுண்டு தெஹிவளையில் இளைஞன் பலி!

கொழும்பு, ஜூன் 09

தெஹிவளை முகாந்திரம் வீதிக்கு அருகில் ஒருவர் ரயிலில் மோதுண்டு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, மருதானையில் இருந்து நேற்று மாலை மாத்தறை நோக்

பக்கம் 18 >>>

## ரூ.60 லட்சம் பெறுமதியான போதைப் பொருள் கல்கிஸையில் மீட்பு!

கொழும்பு, ஜூன் 09

கல்கிஸைப் பிரதேசத்தில் ரூபா 60 இலட்சம் பெறுமதியான போதைப் பொருளைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்

பக்கம் 18 >>>

## படிப்பறிவற்ற சிறுவர் 51,249 பேர்!

### ஆய்வு மூலம் கண்டறிவு

கொழும்பு, ஜூன் 09

இலங்கையில் மாணவர் பருவத்திலுள்ள 51ஆயிரத்து 249 பேர் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை என ஆய்வொன்றில் கண்டறியப்பட்டுள்ளது.

தொழிலாளர் மற்றும் தொழிற் சங்க உறவுகள் அமைச்சின் வேண்டுகோளின் பேரில் புள்ளிவிவரவியல் திணைக்களமும் தேசிய கொள்கை

பக்கம் 18 >>>

## மீனுக்கு வரி குறைப்பு சீனிக்கு அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 09

இறக்குமதி செய்யப்படும் மீன்களுக்கான விசேட இறக்குமதி வரி 25 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது என நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

அதன் அடிப்படையில் இறக்குமதி செய்யப்படும் ஒருகிலோ மீனுக்கான வரி ரூபா 75 இலிருந்து ரூபா 50 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

அனர்த்த நிலைமை

பக்கம் 18 >>>

## 24 மணிநேர விபத்துக்களில் 7 பேர் சாவு!

கொழும்பு, ஜூன் 09

நாட்டில் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட வாகன விபத்துக் காரணமாக கடந்த 24 மணித்தியா

பக்கம் 18 >>>

## விசாரணை அறிக்கையை பகிரங்கப்படுத்த வேண்டும்

### விக்கியிடம் சிவில் சமூகம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 09

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கையைப் பகிரங்கமாக வெளியிடுமாறும், அது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் வடக்கு சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுகளை விசாரணை செய்த சுயாதீனக் குழு, தனது விசாரணை அறிக்கையை வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனிடம் கையளித்துள்ளது. அந்த விசாரணை அறிக்கையைச் சபையில் நேற்று முன்தினம் முதலமைச்சர் சமர்ப்பித்துள்ளார்.

பக்கம் 18 >>>

### அளப்பு அருணாசலம்



அப்ப... கைக்கு எட்டினது வாய்க்கு எட்டாது போலை...!

## திருமலையில் அபகரித்த நகைகளுடன் யாழ்ப்பாணம் வந்த மூவர் சிக்கினர்

### அவர்கள் ஒரே குடும்பத்தவர்கள்



திருமலை, ஜூன் 09

திருகோணமலை - பாலையூற்றுப் பகுதியில் அபகரித்த 13 பவுண் நகைகள் திருகோணமலை பொலிஸ்தலைமையகக் குற்றத் தடுப்புப் பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி மற்றும் பிள்ளை ஆகியோரே பொலிஸாரால் கைது

பக்கம் 18 >>>

# கொழும்பில் வாகனங்களில் கொள்ளை; மாணவர்கள் குழு பொலிஸாரால் கைது!

கொழும்பு, ஜூன் 09

கொழும்பில் வாகனங்களில் கொள்ளையடிக்கும் மாணவ குழுவொன்றை மிரிஹான விசேட குற்ற விசாரணை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

வாடகை வண்டிச் சேவை சாரதிகளுக்கு கத்தியைக் காட்டி அச்சுறுத்தி அவர்களிடம் இருக்கும் தங்க ஆபரணம், கையடக்கத் தொலைபேசி மற்றும் பணம் கொள்ளையடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

கொழும்பில் பிரபல பாடசாலைகளைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் இவ்வாறு குழுவாகச் செயற்பட்டு கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்.

கொள்ளையடிக்கப்பட்ட 6 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் பொலிஸாரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்றும் தகவல் வெளியாகியுள்ளன.

சந்தேகநபர்கள் கொள்ளையடித்த பொருள்களின் பெறுமதி சுமார் 6 லட்சத்திற்கும் அதிகம் என குற்ற விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 17 மற்றும் 18 வயதுடையவர்கள் எனவும், இவர்கள் பிலியந்தலை, கிருலப்பனையைச் சேர்ந்தவர்கள் என மிரிஹான விசேட பொலிஸ் குற்ற விசாரணை பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இவர்கள் பிலியந்தலை, கடுவெல, பொரலஸ்கமுவ, ராஜகிரிய ஆகிய பிரதேசங்களில் வாடகைச் சேவை சாரதிகளை பயணத்திற்காக அழைத்து சென்று பாழடைந்த இடத்தில் கத்தியைக் காட்டி அவர்களிடம் உள்ள கையடக்கத் தொலைபேசி, தங்க நகை மற்றும் பணம் ஆகியவற்றைக் கொள்ளையடித்துள்ளனர் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (க)

# கொழும்பில் நீர் கசிவு; 45 வீதம் வரை நஷ்டம்!



கொழும்பு, ஜூன் 09

கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் ஏற்படும் நீர் கசிவு காரணமாக 45 வீத நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்காக 4 வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் கே.ஏ. அன்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தத் திட்டத்தின் மூலம் நீர் கசிவதை 10 சதவீதமாக குறைக்க முடியும்.

இதேவேளை, கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நீர் குழாய்கள் 30 வருடப் பழைமை வாய்ந்தவை.

கொள்ளுப்பிட்டி , மட்டக்குளி,பொரளை மற்றும் மாளிகாவத்தை ஆகிய பகுதிகளிலேயே இவ்வாறு நீர் கசிவு ஏற்படுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

### அனர்த்த மதிப்பீடு தொடர்பில்

# கூட்டு எதிர்க்கட்சி குற்றச்சாட்டு; நிராகரிக்கிறது நல்லாட்சி அரசு!



கொழும்பு, ஜூன் 09

சமீபத்திய இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் சரியான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவில்லை என கூட்டு எதிர்க்கட்சியினர் சுமத்தும் குற்றச்சாட்டை அரசு முற்றாக நிராகரித்துள்ளது.

அம்பாந்தோட்டை, அங்குனுகொலபலஸ்ஸ பலமிபோறுவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீரை வழங்குவதற்காக நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்விலேயே அமைச்சர் சஜித் பிரேமதாஸ உரையாற்றியுள்ளார்.

இதன் போதே அவர் கூட்டு எதிர்க்கட்சியின் குற்றச்சாட்டை நிராகரித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் அனைத்து மதிப்பீட்டு நடவடிக்கைகளும் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

சமகால நல்லாட்சி அரசு எந்தவித நிதி மோசடியையும் மேற்கொள்ளவில்லை. பொது மக்களுக்காக விநியோகிக்கப்படும் நிவாரணங்கள் மூலம் முறையற்ற அரசியல் நன்மையை பெற்றுக் கொள்வதற்கு நல்லாட்சி அரசு செயற்படாது.

நிவாரணம் வழங்கப்பட வேண்டிய தரப்பினருக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதற்காக அரசு நிதியொதுக்கீடு செய்துள்ளது.

வெளிநாட்டு நிவாரணப் பொருள்களை விநியோகிப்பதில் முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# பொசன் தினக் கொண்டாட்டங்கள்; அனுராதபுரத்தில் விசேட பாதுகாப்பு!

கொழும்பு, ஜூன் 09

இலங்கைக்கு பௌத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட நாளான பொசன் தினத்தை முன்னிட்டு நேற்று அனுராதபுரத்தில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மிஹிந்த தேரர் மூலமாக பௌத்த தர்மம் குறித்த செய்தி இலங்கைக்கு எடுத்துவரப்பட்டு, மிஹிந்தலைக் காட்டில் வேட்டைக்குச் சென்றிருந்த நிலையில் தேவனம்பியதிஸ்ஸ மன்னனுக்கு அந்தச் செய்தி எத்தி வைக்கப்பட்டிருந்தது. அன்றைய தினம் ஒரு பொசன் பௌர்ணமி தினமாகும்.

இதன் காரணமாக இலங்கைக்கு பௌத்தம் அறிமுகம் செய்யப்பட்ட பொசன் பௌர்ணமி தினத்தில் மிஹிந்த தேரரின் முதல் போதனை இடம்பெற்ற மிஹிந்தலை மற்றும் அன்றைய ராஜ தானியான அனுராதபுரத்தை முன்னிறுத்தி பௌத்தர்களின் கொண்டாட்ட வைபவங்கள் நடைபெறுவது வழக்கமாகும்.

இந்நிலையில் நேற்று ஆரம்பமான 2017 ஆம் வருடத்துக்கான பொசன் வைபவங்களை முன்னிட்டு அனுராதபுரத்தில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கென சுமார் மூவாயிரம் பொலிஸார் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்களைக் கண்காணிக்கும் மற்றும் பாதுகாப்பு வியூகங்களை வகுக்கும் பணிகளில் பத்து உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக ஆயிரம் பேர் கொண்ட விசேட அதிரடிப்படையினரும் அனுராதபுர நகரின் பாதுகாப்புத் தேவைகளுக்காக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

நகருக்குள் வரும் வாகனங்களைச் சோதனையிடுவதற்கான பாதுகாப்பு சாவடிகளும் பல இடங்களில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன என்றும் அனுராதபுர பொலிஸ் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

### அம்பாந்தோட்டை துறைமுகத்தின்

# எண்ணெய்த் தாங்கி அறிக்கை கையளிக்கப்படும் அர்ஜுனவிடம்!

கொழும்பு, ஜூன் 09

அம்பாந்தோட்டை துறைமுக எண்ணெய் தாங்கித் தொகுதியை விற்பனை செய்வதை நிறுத்துவதற்காக கனிய எண்ணெய் தொழிற்சங்கங்கள் தயாரித்த அறிக்கை கனிய எண்ணெய் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவிடம் கையளிக்கப்படவுள்ளது.

6 தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து இந்த அறிக்கையை தயாரித்துள்ளன என்று கனிய எண்ணெய் தொழிற்சங்க ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் டீ.ஜே. ராஜகருணா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அம்பாந்தோட்டை துறைமுக எண்ணெய் தாங்கி தொகுதிகளால் எவ்வாறு இலாபமீட்ட முடியும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், அது இலங்கைக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததென்றும் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரிடமும் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நிவாரணப் பொதி!



கொழும்பு, ஜூன் 09

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 25 ஆயிரம் மாணவர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படவுள்ளன.

கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தின் ஆலோசனைக்கு அமைய இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குத் தேவையான அனைத்து பொருள்களும் இந்த நிவாரணப் பொதியில் அடங்கியிருக்கிறது என்றும் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தவை வருமாறு:-

எட்டு மாவட்டங்களில் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்காக இந்த நிவாரண வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மாணவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும்.

பாடசாலை மாணவர்கள் குறித்து சரியான தகவல்கள் அதிபர்கள், கிராம உத்தியோகத்தர்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்படும்.

சரியான தகவல்களை உறுதி செய்த பின்னரே நிவாரணப் பொதி வழங்கப்படும்.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய பாடசாலைகள் மற்றும் பல வர்த்தக நிறுவனங்கள் திரட்டிய பொருள்கள் கல்வி அமைச்சிடம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது.

இதற்காக பங்களிப்புச் செய்த அனைவருக்கும் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் நன்றி தெரிவித்துள்ளார். (க)

## வனவளப் பாதுகாப்பு; சீனாவுடன் ஒப்பந்தம்



வனவளப் பாதுகாப்பு மற்றும் பரிமாற்றங்களை மேற்கொள்ளும் வகையில் சீனாவுடன் புதிய ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திடுவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகக் கூறப்படுகின்றது.

இந்த ஒப்பந்தத்தின் ஊடாக இரு நாடுகளும் தமக்குரிய அரியவகை வளங்களைப் பரிமாறிக் கொள்ளவும் ஆய்வுகள் மற்றும் பயிற்சிகளுக்குப் பயன்படுத்தவும் முடியும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது. (ம)

# வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் தமிழர் போராட்டங்களால் கிடைத்தவை

## அவற்றுக்குப் பின்னால் தமிழரின் வீர வரலாறு உள்ளது என்கிறார் அமைச்சர் மனோ கணேசன்



கொழும்பு, ஜூன் 09

வடமாகாண சபை அமைச்சர்கள் மீது முன்வைக்கப்பட்ட முறைகேடு குற்றசாட்டுக்கள் தொடர்பில் முதல்வர் விக்னேஸ்வரன் ஒரு விசாரணைக்குழுவை நியமித்து அறிக்கையைப்பெற்று நடவடிக்கை எடுத்துள்ளமை வரவேற்கத்தக்கதாகும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் மனோ மேலும் கூறியதாவது,

இலங்கையில் மிகவும் பிரபல மாகாண சபைகள், வட மாகாண சபையும், கிழக்கு மாகாணசபையும் ஆகும். இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. இந்நாட்டில் அதிகாரப்பகிர்வு கோரிப் போராடியது, தமிழர்களாகும். அகிம்சை ரீதியிலும் ஆயுத ரீதியிலும் போராட்டங்களை முன்னெடுத்து பெரும் துன்பங்களுக்கு முகங்கொடுத்தவர்கள் தமிழர்கள் ஆகும்.

ஆகவே அதிகாரப்பகிர்வின் ஒரு கட்டமாக மாகாண சபைகளை வழங்கப்பட்ட போது, உருவாகிய நிலைமையை அரசியல் ரீதியாகச் சமாளிக்கவே ஏனைய ஏழு மாகாணங்களுக்குமாக இந்த முறைமையை ஜனாதிபதி ஜே.ஆரும், பிரதமர் ராஜீவும் தந்தார்கள்.

ஆகவே இன்று தெற்கில் இருக்கின்ற மாகாணசபைகள் சும்மா கிடைத்தவை ஆகும். ஆனால் வடக்கில், கிழக்கில் அவை சும்மா கிடைக்கவில்லை என்பதைப் பொறுப்புகளில் உள்ளோர் உணர வேண்டும். இவற்றின் பின்னால், தமிழ் மக்களின் பெரும் தியாக வரலாறு இருக்கின்றது என்பதை அனைவரும் உணர வேண்டும். இதுதான் உண்மை.

ஆகவே, ஏனைய மாகாண சபைகளில், குழப்பம், ஊழல், அதிகார துஷ்பிரயோகம் இல்லையா? என்று கேள்வி கேட்டு வடக்கில், கிழக்கில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு எவரும் சப்பை கட்டு கட்ட முடியாது.

எனவே இன்று இந்த விவகாரம் தொடர்பில் முதல்வர் விக்னேஸ்வரன் ஒரு விசாரணைக்குழுவை நியமித்து அறிக்கையைப் பெற்று நடவடிக்கை எடுத்துள்ளமை நல்ல முற்போக்கான நடவடிக்கையாகும்.

தனி ஒரு நாட்டைக் கோரிய உங்களுக்கு, ஒரு மாகாண சபையையே பரிபாலிக்க முடியவில்லையா என தெற்கில் எழும் கூச்சலுக்கு உரிய பதிலை தரும் பொறுப்பு முதல்வரிடம் இருக்கின்றது. கிடைக்கப்பெற்றுள்ள அறிக்கையின் பிரகாரம் காரியங்களைமுன்னெடுக்கஅவருக்கு அவர்வணங்கும்தெய்வம்அருள் பாலிக்கட்டும். - என்று மனோ கணேசன் கூறியுள்ளார். (ம)

## மருத்துவ மாணவர்களின் பகிஷ்கரிப்புத் தொடர்ந்தால்

# அடுத்த வருடம் வைத்தியசாலைகளுக்கு போதிய மருத்துவர்களை அனுப்பமுடியாது

## மருத்துவ கலாநிதிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 09

மருத்துவபீட மாணவர்களின் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் விரைவில் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முன்வராவிட்டால் அடுத்த வருடம் மருத்துவமனைகளுக்கு போதிய மருத்துவர்களை அனுப்ப முடியாமல் போகும் என மருத்துவ கலாநிதிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும், மருத்துவ பீடத்திற்கு புதிய மாணவர்களை இணைத்துக்கொள்வது மற்றும் மருத்துவ கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்களை வெளியேற்றுவது போன்ற விடயங்கள் 5 வருடத்திற்கு காலதாமதமாகும் எனவும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியினை மூடுமாறு மருத்துவபீட மாணவர்கள் இந்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் வகுப்புக்களைப் புறக்கணித்து வருகின்ற நிலையிலேயே மேற்படி எச்சரிக்கை மணி அடிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக, மருத்துவ பீட கலாநிதிகள் சங்க உறுப்பினர் வைத்திய கலாநிதி சன்ன ஜயசுமன, மேலும் தெரிவிக்கையில் -

மருத்துவபீட மாணவர்களின் விரிவுரை புறக்கணிப்பு இந்த வருடத்திற்குள் நிறைவடையாவிட்டால், அதன் தாக்கமானது 10 வருடங்கள் வரை நீடிக்கும். மருத்துவபீட மாணவர்களுக்காக நடத்தப்படும் பரீட்சைகளின் போது வரவு 80 வீதம் காணப்பட வேண்டும்.

எனினும், இந்த வருடத்தை எடுத்துக்கொண்டால் எந்தவொரு மாணவருக்கும் பரீட்சையில் தோற்றமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, மருத்துவ பீட மாணவர்களின் கோரிக்கை களுக்கு அரசாங்கம் விரைவில் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டியது அவசியம். - என்றார். (ம)

# ஊடகங்களுக்கான சுயாதீனப் பேரவை சட்டவரைவுக் கலந்துரையாடல் நேற்று

## ஊடக, அரசியல் பிரதிநிதிகள் பங்கேற்பு







(எஸ்.நிதர்ஷன்)

பொதுஜன ஊடக மறுசீரமைப்புச் செயலகம், யாழ். பல்கலைக்கழக ஊடக கற்கைகள் துறை மற்றும் யாழ்ப்பாண ஊடக அமையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் செய்தி ஊடக தர நிர்ணயங்களுக்கான சுயாதீனப் பேரவைச் சட்ட வரைவு தொடர்பான பொதுக் கருத்தறியும் கலந்துரையாடல் நேற்று மாலை யாழ். ரில்கோ விடுதியில் நடைபெற்றது.

யாழ். ஊடக அமையத்தின் இணைப்பாளர் இ.தயாபரன் தலைமையில் ஆரம்பமாகிய இந்த நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக ஊடகத் துறை இணைப்பாளர் கலாநிதி இ.இரகுராம், யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி கு.குருபரன், இலங்கை ஊடகக் கல்வி மற்றும் ஆய்வு நிறுவனத்தின் தலைவர் தீபாஞ்சலி அபேவர்த்தன, கொழும்பு பல்கலைக்கழக ஊடகத்துறைத் தலைவர் கலாநிதி பிரதீப் வீரசிங்க மற்றும் பொதுஜன ஊடக மறுசீரமைப்பு செயலக அதிகாரிகளும் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கினர்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், எம்.கே.சிவாஜிலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிறேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ், ஊடகவியலாளர்கள், ஊடக மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ம)

# வவுனியாவில் சுதந்திரப் பூங்கா நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது



வவுனியா, ஜூன் 09

வவுனியா ஏ-9 வீதியில், இரட்டைப்பெரியகுளத்தில் நேற்று சுதந்திரப் பூங்கா திறந்து வைக்கப்பட்டது.

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இணைந்து இந்தப் பூங்காவைத் திறந்துவைத்தனர்.

இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர்களான செ.மயூரன், ஜெயதிலக்க, வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.பி.நடராஜா, வவுனியா, மன்னார் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தென்னக்கோன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (ம)

# திருகோணமலை பள்ளிவாசல் தீவைப்பு; தமிழ் இளைஞர் ஒருவர் நேற்றுக் கைது

வவுனியா, ஜூன் 09

திருகோணமலை பெரிய கடை ஜும்மா பள்ளிவாசல் மீது இடம்பெற்ற தீவைப்புச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் தமிழ் இளைஞர் ஒருவரைப் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

மேற்படி பள்ளிவாசல் மீது கடந்த 3 ஆம் திகதி அதிகாலை இனந்தெரியாத விஷமிகளால் தீ வைக்கப்பட்டிருந்தது. நள்ளிரவு 11 மணி முதல் அடுத்த நாள் அதிகாலை 3 மணிக்குள் நடைபெற்ற அந்தத் தீவைப்புச் சம்பவத்தில் பள்ளிவாசலின் தரை விரிப்புகள் தீயினால் கருகிப் போயிருந்தன.

அத்துடன் பள்ளிவாசலின் உள்ளே வீசியெறியப்பட்ட நிலையில் ஒரு மதுபானப் போத்தலும் அதற்குள் எரிபொருளும் காணப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்திருந்த பொலிஸார், 22 வயதுடைய இளைஞர் ஒருவரைக் கைது செய்துள்ளனர். (ம)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## வடக்கு மாகாண சபைச் சர்ச்சை

அண்மை நாள்களில் நம் மத்தியில் அதிகம் பேசப்படும் விடயமாக இருப்பது வடக்கு மாகாணசபை அமைச்சர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட விடயங்களும், அவை தொடர்பான விசாரணைக் குழுவின் அறிக்கை மற்றும் பரிந்துரைகளுமாகும். 2013 இறுதியில் வடக்கு மாகாணசபை புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட காலம் தொட்டே அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் பரவலாகவே முன்வைக்கப்பட்டு வந்தன. பல குற்றச்சாட்டுகள் வெளியில் இருந்து வந்தாலும் கூட உள்ளே - மாகாணசபை உறுப்பினர்கள் மத்தியில் இருந்தும் - அதுவும் ஆளும் கட்சியின் சக உறுப்பினர்களிடம் இருந்தும் கூட - தாராளமாக இத்தகைய முறைப்பாடுகள் பரவலாக வரத் தவறவில்லை.

ஆனாலும் வடக்கு மாகாணசபையைப் பொறுத்தவரை இத்தகைய குற்றச் சாட்டுகள் எல்லை மீறியபோது அவை தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு இரண்டு வழிகள் முதல்வருக்கு இருந்தன.

ஒன்று - மாகாணசபை உறுப்பினர்களைக் கொண்டு தெரிவுக் குழு ஒன்றை உருவாக்கி அதன் மூலம் இந்த விடயங்களை விசாரித்தல்.

அடுத்தது - இவ் விவகாரம் தொடர்பில் தாமே விசாரணை நடத்துவது.

இரண்டாவது வழியை முதல்வர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் தேர்ந்தெடுத்தார். மாகாணசபை உறுப்பினர்களின் தெரிவுக்குழு ஒன்றை நியமித்து அதன் மூலம் அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதை விட்டு தாமே அதை கையாள அவர் விரும்பினார். மேற்படி குற்றச்சாட்டுகள் குறித்து தமது சார்பில் விசாரணை நடத்தி தமக்கு பரிந்துரை செய்வதற்காக ஓர் உயர் மட்டக்குழுவை அவர் நியமித்தார். இரண்டு முன்னாள் நீதிபதிகள், ஒரு மூத்த முன்னாள் நிர்வாகி ஆகியோரை உள்ளக்கியதான குழு அது.

இந்த குழுவை முதலமைச்சர் நியமித்தபோதே அந்த நியமனம் தொடர்பில் சில அதிருப்திக் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. விடுதலைப்புலிகள் யாழ்ப்பாணத்தை நிர்வகித்த சமயத்தில் முஸ்லிம் மக்களுக்கு சொந்தமான காணிகளின் உறுதிகள் கைமாற்றம் தொடர்பில் இடம்பெற்ற முறைகேடுகள் சம்பந்தமாக, யாழ்ப்பாணம் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட கையோடு பரபரப்பாக செய்திகள் வெளியாகின. இப்போது மாகாணசபை ஊழல் குறித்து விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஒருவர் அன்று விசாரணைக்கு உள்ளாக வேண்டியவராக இருந்ததால், அது குறித்து பத்திரிகையில் செய்திகள் வெளியானதும் பத்திரிகைக்கு எதிராக ஜனாதிபதி சட்டத்தரணி ஒருவர் மூலம் எச்சரிக்கைக் கடிதம் அனுப்பினார் அவர். எல்லா விடயங்களையும் பகிரங்கமாக வெளியிடவும் அம்பலப்படுத்தவும் பத்திரிகை தயார் என அறிவித்ததும் அவர் பம்மிக் கொண்டார்; அடங்கிப் போனார்.

அத்தகைய ஒருவரை முதலமைச்சர் விசாரணைக் குழுவுக்கு நியமித்தபோதே இது குறித்து பேசப்பட்டது. ஆனாலும், முதலமைச்சர் தனக்கு ஆலோசனை கூற - பரிந்துரைக்கும் ஒரு குழுவை நியமிக்கின்றார். அது அவரது முடிவுக்கு அப்பாற்பட்டது. அதில் பிறர் தலையிடுவது பொருத்தமற்றது என்பதால் அப்போது அது குறித்து அதிகம் அலட்டிக் கொள்ளப்படவில்லை.

இப்போது கூட அதுதான் நிலைமை. இவ் விவகாரம் குறித்து தமக்கு ஆலோசனை வழங்கவும் - தம் சார்பில் விசாரணைகளை நடத்தி தமக்கு பரிந்துரைகளை வழங்கவும் - நியமிக்கப்பட்ட ஒரு குழுவே. முதல்வர் கேட்ட விடயங்களை தனது கவனத்தில் கொண்டு பரிந்துரைகளைச் சமர்ப்பித்திருக்கின்றது.

இப்போது அவர் நியமித்த விசாரணைக் குழுவின் அறிக்கை அவருக்கு கிடைத்திருக்கின்றது. அதை ஏற்பதா? அதில் உள்ள பரிந்துரைகளை கவனத்தில் கொள்வதா? அவர்கள் நடத்திய விசாரணை முறைமைகள் சரியானவையா? அவற்றை ஏற்று நடைமுறைப்படுத்துவது பொருத்தமானதா? அல்லது புதிய விசாரணைகளுக்கு உத்தரவிடவேண்டுமா? - இவை எல்லாவற்றையும் முடிவு செய்யவேண்டியவரும் முதல்வர் தான்.

அதற்கு முன்னர் அவை தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் மற்றும் தமது சக மாகாணசபை உறுப்பினர்களிடம் கருத்துக்களை - ஆலோசனைகளை - செவிமடுக்க விரும்புகின்றார் அவர். அதற்காகவே 14 ஆம் திகதி சபையில் விசேட கூட்டத்தைக் கூட்டியிருக்கின்றார் அவர்.

எனினும், இவை தொடர்பில் முதல்வர் ஒரு முடிவை எடுப்பதற்கு முன்னர். ஓரிரு விடயங்களைத் தொட்டுக்காட்டுவது அவசியம் ஆகின்றது.

13 ஆவது திருத்தத்தின் கீழ் மாகாணசபைக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை மீறி, மத்திய அரசின் அதிகாரத்தை கையில்எடுத்து செயற்பட்டார்கள் என்பது ஒரு குற்றச்சாட்டாக இருக்குமாயின் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அது தண்டனைக்குரிய குற்றமன்று, பாராட்டுக்குரிய சாதனைதான்.

அதே நேரத்தில் அதிகாரத்தை மீறி பழிவாங்கும் நோக்குடன் அல்லது சுயலாபம் சம்பாதிக்கும் இலக்குடன் செயற்பட்டு இருந்தால் அது தண்டிக்கப்படவும் கண்டிக்கப்படவும் வேண்டியதே. அதேபோல பணவிரயம், பொருத்தமற்ற நடவடிக்கை போன்றவை தொடர்பிலும் முடிவெடுப்பதும் முதல்வரின் கையில்தான் உள்ளது.

ஆனாலும், அமைச்சர்களை நோக்கி குற்றச்சாட்டு விரல் நீளும் போது முதல்வரும் அதற்கு பொறுப்பேற்க வேண்டியவராக இருக்கின்றார். அமைச்சர்கள் இழைத்தவை குற்றமாயின் அதற்கு சுமார் 4 வருடங்களாக அனுமதித்து வாளாவிருந்த முதல்வரும் அந்தக் குற்றச்சாட்டுக்கு தார்மீகப் பொறுப்பேற்று தமக்குத் தாமே தண்டனை விதிக்க வேண்டியவர் ஆகின்றார் என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

## பிலியந்தலை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்: சந்தேகநபர்கள் இருவருக்கும் மறியல்!

பிலியந்தலைப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட இருவரும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட 34 மற்றும் 27 வயதையுடைய சந் தேக நபர்கள் இருவரும் நேற்று கஸ்பேவ நீதிபதி சுனில் வீரசிங்க முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டதையடுத்து, இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இவர்களில் ஒருவர் தர்கா நகரையும், மற்றவர் அஹுங்கல்ல பிரதேசத்தையும் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

கடந்த மாதம் 9 ஆம் திகதி போதைப் பொருள் சுற்றி வளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இச்சம்பவத்தில் பொலிஸ் அதிகாரியொருவரும் பாதையில் இருந்த சிறுமி ஒருவரும் உயிரிழந்திருந்தனர். மேலும் இரு பொலிஸாரும், சிவிலியன்கள் இருவரும் படுகாயமடைந்தனர்.

மிரிஹான பொலிஸ் பிரிவினால்சுற்றி வளைக்கப்பட்டு இந்தச்சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## காதலனை பார்க்கச் சென்ற காதலி மண்சரிவில் சிக்கி உயிரிழந்தார்!





**சடலத்தை தேடி கண்டுபிடித்தது நாய்!**

கொழும்பு, ஜூன் 09

காதலனை பார்க்கச் சென்று மண்சரிவில் சிக்கி உயிரிழந்த யுவதியின் சடலத்தை நாய் ஒன்று கண்டுபிடித்துள்ளது.

அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக பலர் உயிரிழந்த நிலையில், பலர் மண் சரிவில் சிக்கி காணாமற் போயுள்ளனர்.

சுமார் 70 பேர் வரையில் காணாமற்போயுள்ள நிலையில், அவர்கள் உயிருடன் வருவார்கள் என உறவினர்கள் காத்திருக்கின்றனர்.

இந்நிலையில் மண்சரிவில் காணாமற்போன இளம் யுவுதி ஒருவரின் சடலத்தை நாயொன்று கண்டுபிடித்துள்ளது.

23 வயதான நிரோஷா ஷயாமலி குணரத்ன என்ற இளம் யுவதியின் சடலமே 5 நாள்களின்பின்னர் நாயினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 26 ஆம் திகதி எஹெலியகொட, மாரபே, போகொட பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் இந்த யுவதி உயிரிழந்துள்ளார்.

இந்த இளம் பெண், தனது காதலனின் வீட்டுக்கு அருகில் மண்சரிவு ஏற்பட்டதை அறிந்து அவரைப் பார்ப்பதற்காகச் சென்றபோது திடீரென வெடிப்புடனான மண்சரிவு ஒன்று ஏற்பட்டுள்ளது.

அங்கு அருகில் இருந்தவர்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடியுள்ளனர். எனினும் இந்தப் பெண் தனது வீட்டை நோக்கி ஓடும் போது மண்ணில் புதைந்துள்ளார்.

5 நாள்களாக பிரதேச மக்கள், இராணுவத்தினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள், பெக்கோ இயந்திரங்களை பயன்படுத்தி தேடியுள்ளனர்.

இந்த நிலையில், நாய் ஒன்று அந்த இடத்தை மோப்பம் பிடித்ததை நபர் ஒருவர் அவதானித்துள்ளார்.

அந்த நாய் மண மற்றும் கற்கள் நிறைந்த இடம் ஒன்றில் தரையைத் தோண்டியுள்ளது. அந்த இடத்தில் தேடிப் பார்த்த போது காணாமற் போன பெண்ணின் சடலம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இந்தப் பெண்ணுக்காக காத்திருந்த தந்தை கடந்த 30ஆம் திகதி உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## தலன்னாவயில் இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் உயிரிழப்பு!

அனுராதபுரம் - கெக்கிராவ தலன்னாவ பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை 12.30 மணியளவில் கெப் வாகனம் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 29 வயதான ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

பாதுகாப்பற்ற முறையில் வாகனத்தை செலுத்திய கெப் வாகனச் சாரதியே விபத்திற்கு காரணம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தின் பின் கெப் வாகன சாரதி அந்தப் பகுதியிலிருந்து தப்பிச் சென்றிருந்தார். அவரை அனுராதபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதேவேளை, அனுராதபுரம் பாதெனிய பிரதான வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று கொள்கலன் வாகனத்துடன் மோதி விபத்திற்குள்ளாகியதில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். குழந்தை ஒன்றும் ஆணொருவரும் காயமடைந்தனர்.

வாகனம் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்டவேளையில் மோட்டார் சைக்கிள் மீது கொள்கலன் மோதியதில் விபத்து சம்பவித்துள்ளது. விபத்துடன் தொடர்புடைய கொள்கலனின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

(க)

## அனர்த்தங்களை ஆராய ஜப்பானிலிருந்து விசேட குழு வருகை!

கொழும்பு, ஜூன் 09

இலங்கையில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு தொடர்பில் ஆராய்வதற்காக ஜப்பான் இடர்முகாமைத்துவ நிலையத்தின் விசேட குழு நாட்டிற்குவருகைதந்துள்ளது.

இலங்கையின் அழைப்பின் பேரிலேயே இந்தக்குழுவினர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இந்தக்குழுவினர் வெள்ளம் மற்றும் மண்சரிவு ஏற்பட்ட பகுதிகளுக்கு தரை மற்றும் ஆகாய மார்க்கமாக விஜயம் செய்து ஆராயவுள்ளனர்.

ஆராய்வு செய்த அறிக்கை இந்த குழுவினரால் இலங்கை அரசிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (க)

சுற்றாடல் சுத்தம் பேணுவோம்! விலங்கு விசர் நோய் ஒழிப்போம்!!

கடித்த நாய்க்கு அல்லது பூனைக்கு ரேபிஸ் தடுப்பு மருந்து பூரணமாக கொடுக்கப்பட்டிருப்பினும் அவ்விலங்கிற்கு ரேபிஸ் தொற்று இல்லை என உறுதிபடக் கூறமுடியாது.



போக்குவரத்து நெருக்கடியான தெருக்களிலிருந்து அவற்றை விலத்தி வைத்திருப்போம்.

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

## நாளை

10.06.2017
சனிக்கிழமை

நட்சத்திரம் : மூலம் முழுவதும் வரை
திதி : பிரதமை மு.இ 8.59 வரை

சுபநேரம் : 2.52 - 4.22 வரை
இராகுகாலம் : 8.52 - 10.22 வரை

# லண்டன் நகரில் இடம்பெற்ற தாக்குதல்களை கண்டிக்கிறது நாடு கடந்த தமிழீழ அரசு!

வொஷிங்டன், ஜூன் 09

லண்டன் தொடர் பயங்கரவாதத் தாக்குதல் சம்பவங்களை நாடுகடந்த தமிழீழ அரசு கண்டித்துள்ளது.

அரசுகளும், அரசல்லாதோரும் அப்பாவிப் பொது மக்கள் மீது நடத்தி வரும் வன்செயல்கள் குறித்து, செஞ்சிலுவைச் சங்கத்தின் 1977 ஆம் மாநாட்டை மீள நடத்த வேண்டும் என்றும் நாடு கடந்த தமிழீழ அரசு அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு :-

மானிட விழுமியங்களைக் கிஞ்சித்தும் மதிக்காமல் லண்டனில் அப்பாவி மக்களைப் படுகொலை செய்தும் காயப்படுத்தியதுமான வெறிச் செயலை நாடுகடந்த தமிழீழ அரசு வன்மையாகக் கண்டிக்கிறது.



கடைசியாக நடந்துள்ள தாக்குதலுக்கு சற்று முன்னர் தான் மான்செஸ்டரில் இசை நிகழ்ச்சி ஒன்றில் நடந்த கொடூரமான குண்டுவெடிப்பில் இருபதுக்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டார்கள். பிரித்தானிய மக்களுக்கும், தங்கள் அன்புக்குரியவர்களை இழந்து தவிக்கும் குடும்பங்களுக்கும் நாடுகடந்த தமிழீழ அரசு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

அண்மைய ஆண்டுகளில் உலகெங்கிலும் பல்வேறு அரசுகளும் அரசல்லாத செயற்பாட்டாளர்களும் நடத்தி வரும் வன்செயல்களிலும் போர் முறையிலும் அப்பாவிக் குடிகள் கொல்லப்படுவது வாடிக்கையாகி விட்டது.

இது போர் வீரர் அல்லாதாருக்கும் பொதுமக்களுக்கும் எதிராக எந்த நிலையிலும் வன்முறை ஏவுவதைத் தடை செய்யும் ஜெனீவா ஒப்பந்தங்களையும், 1977 வகை முறை விதிகளையும், பிற பன்னாட்டு உடன்படிக்கைகளையும் அறவே மீறுவதாகும்.

இன்று, அரசினர் ஆயினும் அரசல்லாதார் ஆயினும், கொடுந்தாக்குதல் நடத்துவோர் குழந்தைகளுக்கும் மருத்துவமனைகளுக்கும் பாடசாலைகளுக்கும் தேவாலயங்களுக்கும் உள்நாட்டுப் புலம் பெயர்ந்தோரின் முகாம்களுக்கும் கூட கருணை காட்டுவதில்லை என்பது வருத்தத்துக்குரிய உண்மை. இவையெல்லாம் பன்னாட்டுச் சட்டத்தின் படி கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டிய போர்க் குற்றங்கள், மானிடத்துக்கு எதிரான குற்றங்கள்.

பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கம் 1977 கூடுதல் வகை முறைகளைத் தோற்றுவித்த மாநாடு போல் மீண்டும் ஒரு மாநாடு கூட்டுவதற்கு இது தான் சரியான தருணம்.

அந்த 1977 வகைமுறைகள் தாம் 'எவ்வகைப் போர் முறையிலும் கடைப்பிடிக்க வேண்டிய சமர்க்கள நெறிகளை விதிக்கும் அனைத்துலக உடன்படிக்கைகளுக்கு அரசினரும் அரசல்லாதாரும் தமது கடப்பாட்டை மீளுறுதி செய்யுமாறு அழைப்புவிடுத்தன.

அதேபோன்று இந்த விதிகளை மீறிச் செயற்படும் எல்லாத் தரப்புகள் மீதும் திறமான விதத்தில் வழக்குத் தொடுப்பதையும் உறுதி செய்யவேண்டும்.

அரசல்லாத செயற்பாட்டாளர்களும் அரசமுகமைகளும் நடத்தும் வன்செயல்களுக்கு நடுவே சிக்கித் தவிக்கும் அப்பாவிப் பொதுமக்களின் உயிர்காக்க வேண்டும் என்பதோடு, மனிதகுலம் முழுவதற்கும் நீதியான, அமைதியான எதிர்காலம் அமைவதை உறுதி செய்யவும் வேண்டும் என்றால் இந்த முன்னெடுப்புகள் அவசரமும் அவசியமுமாகும் எனப் பிரதமர் வி.உருத்திரகுமாரனின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## காங்கேசன்துறையில் இருந்து இரும்பு எடுத்துச் செல்லப்பட்டது!

### முன்னாள் இராணுவத் தளபதி சாட்சியம்



கொழும்பு, ஜூன் 09

இராணுவத் தளபதியாக இருந்த தனது ஆணையை மீறி ஒரு குழுவினர் காங்கேசன் துறை சிமெந்து தொழிற்சாலையின் இராட்சத இயந்திரங்களை உடைத்து, பழைய இரும்புக்காக விற்பனை செய்தனர் என்று முன்னாள் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் தயா ரத்நாயக்க சாட்சியம் அளித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்திருந்த காங்கேசன் துறை சிமெந்து தொழிற்சாலையில் இருந்த பெரிய இயந்திரங்கள், பழைய இரும்புக்காக வெட்டிஎடுத்துச்செல்லப்பட்டதால், அரசுக்கு பல மில்லியன் ரூபா இழப்பு ஏற்படுத்தப் பட்டது.

இது குறித்து, ஊழல், மோசடிகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகங்கள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் முன்பாக சாட்சியம் அளித்த போதே, லெப். ஜெனரல் தயா ரத்நாயக்க, தனது ஆணையை மீறி செயற்பட்ட குழுவே இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும் என்று கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் காலை 9.30 மணி தொடக்கம், 12.30 மணி வரையாக 3 மணிநேரம், அவரிடம் விசாரணைகள் நடத்தப்பட்டன.


இந்த மோசடி தொடர்பாக, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் பலரையும் ஜனாதிபதி ஆணைக் குழு விசாரிக்கவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## மடிக்கணினியில் தங்கம் கடத்தியவர் கைது

கொழும்பு, ஜூன் 09

இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு விமான மூலம் மடிக் கணினியில் 40 லட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தை கடத்திச் செல்ல முற்பட்ட ஒருவர் பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் அதிகாலை சுங்கப் பிரிவினரால் கைது செய் யப்பட்டுள்ளார் என்று விமான நிலையப் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவரிடம் விசாரணைகள் இடம் பெற்று வருகின்றமையுடன் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## சீனாவின் திட்டத்தில் இணைந்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை இந்தியா!



### வெளிவிவகார அமைச்சர் கருணாநாயக்க தெரிவிக்கிறார்

கொழும்பு, ஜூன் 09

சீனாவின் 'பாதை மற்றும் அணைத்திட்டத்தில் இலங்கை இணைந்து கொண்டமை குறித்து, இந்தியா கவலை தெரிவிக்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள்கள் விஜயமாக புதுடில்லி சென்ற அவர் தனது பயணத்தின் முடிவில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களைச் சந்தித்த போதே இவ்வாறு கூறினார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், வெளி விவகாரச் செயலர் ஜெய்சங்கர் உள்ளிட்டோருடன் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சீன முதலீடுகளின் மூலம் 3 ஆயிரம் தொடக்கம் 5ஆயிரம் ஆண்டுகள் பழைமையான கப்பல் பாதை சிறிலங்காவில் புத்துயிர் பெற்றுள்ளது.

பிராந்திய வர்த்தகம் முன்னோக்கி நகர வேண்டும். ஒரு நாடு ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது, அது மற்றொரு நாட்டுக்கு எதிரானது அல்ல.

சீனாவுக்கு ஹொங்கொங் ஒரு ஆரம்பத் தளமாக இருந்தது போல, இந்தியாவின் பொருளாதார செயற்பாடுகளுக்கான கேந்திரமாக இலங்கை மாறலாம்.

சீனாவைப் போலவே, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளில் இருந்து முதலீடுகளை இலங்கை வரவேற்கிறது.

கொழும்புத் துறைமுக கிழக்கு முனையத்தில் இந்தியாவின் முதலீடுகளை வரவேற்கிறோம்.

கொழும்புத்துறைமுகத்தில் இரண்டு புதிய கொள்கலன் முனையங்கள் கட்டப்படவுள்ளன. இந்தத் திட்டத்தில் இரண்டு இந்திய நிறுவனங்களின் கூட்டமைப்புகள் ஆர்வம் கொண்டுள்ளன.

சீனாவின் அணை மற்றும் பாதைத் திட்டத்தில் இலங்கையின் ஈடுபாடு குறித்து, எனது புதுடில்லிப் பயணத்தின் போது, இந்திய அரசு கவலை எதையும் வெளியிடவில்லை.

இந்திய அரசு இதுகுறித்து முன்னர் கவலை தெரிவித்தது. இதனை இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் கவனத்தில் எடுத்து முடிவு செய்திருந்தனர். இப்போது தமது முடிவை மீளாய்வு செய்வதாக இந்தியா என்னிடம் தெரிவித்துள்ளது.

இலங்கை ஒரு சிறிய நாடு. நாம் எவரையும் பகைமையுடன் பார்க்கவில்லை. அனைவரையும் அரவணைத்துச் செல்லும் கொள்கையையே கடைப்பிடிக்கிறோம்.- என்றும் அவர் தெரிவித்தார். (க)

14 மாணவர்களுக்கான வகுப்புத் தடையை நீக்கக் கோரி

## தென்கிழக்கு பல்கலையில் கண்டன ஆர்ப்பாட்டம்!



14 மாணவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வகுப்புத்தடையை நீக்குமாறு கோரி, தென்கிழக்கு பல்கலைக்கழக சம்மாந்துறை வளாகப் பிரயோக விஞ்ஞான பீட மாணவர்கள் நேற்று வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக நுழைவாயிலுக்கு முன்பாக நின்று சக மாணவர்கள் 14 பேரின்வகுப்புத்தடையை நீக்க வலியுறுத்தி, மாணவர்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

புதுமுக கலைப்பீட மாணவர்களை வரவேற்கும் நிகழ்வுக்கான ஏற்பாடுகளின் போது பல்கலைக்கழகச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றது. இது தொடர்பான விசாரணையின்போது, விரிவுரையாளர்களை இழிவுபடுத்தும் வகையில் செயற்பட்டனர் எனக் கூறி மேற்படியான 14 மாணவர்களுக்கும் வகுப்புத் தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தனிநபர் செய்த குற்றத்துக்காக ஒரு சமூகத்தையே விமர்சிப்பது இனமுறுகலை ஏற்படுத்தும்!

கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு



மூதூர் சிறுமிகளைத் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய சம்பவத்துடன்தொடர்புடைய குற்றவாளி தண்டிக்கப்பட வேண்டும். ஆனால், ஒரு தனி நபர் செய்த குற்றத்துக்காக, ஒரு சமூகத்தைச் சார்ந்தவர்களையே விமர்சிப்பது, இனமுறுகலை ஏற்படுத்தும்.

-இவ்வாறு கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன், தோப்பூர் பெரியவெளி கிராம பாடசாலைக்குச் சென்ற மூன்று சிறுமிகள், துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்துக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்கள் தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர்அலுவலகத்தில், நேற்றுமுன்தினம் புதன்கிழமை சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இரண்டு சமூகங்களும் தொடர்ந்தும் போராட்டங்களை முன்னெடுத்தால், உண்மையான குற்றவாளியைக் கைதுசெய்வதற்கான வழிவகைகள், கை நழுவிப் போகலாம். அவற்றை கைவிடும்படி, இரு சமூகங்களைச் சார்ந்தவர்களிடமும் கேட்டுக் கொள்கிறேன்.

விசேடமாக, பொலிஸாருக்கு சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள உத்தரவு இட்டிருக்கிறோம். அவற்றுக்கானவிசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

பாடசாலை மாணவர்களைப்பயன்படுத்திப் போராட்டங்களை நடத்துவது, பெற்றோர்களே தமது பிள்ளைகளின் கல்வியைச் சீர்குலைக்கின்ற செயற்பாடாகும். அத்தோடு திருகோணமலையில் இடம்பெற்ற சம்பவத்துக்கு, மட்டக்களப்பு மற்றும் ஏனைய பகுதிகளில் போராட்டங்களை நடத்துவது, பொருத்தமற்ற செயல். அவற்றினூடாக, இன வன்முறைகளே ஏற்படும்.

இதன்போது, மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி வைத்திய லங்கார தெரிவிக்கையில்-

'வன்புணர்வு செய்த பகுதியில் இருந்து எடுக்கப்பட்ட சந்தேகநபரின் மரபணு மீதான பரிசோதனை அறிக்கை, எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறும். இதனை அடுத்து, உண்மையான குற்றவாளியார்என்பதை இனங்கண்டு, அவர்களுக்கான தண்டனை வழங்கப்படும். குறிப்பாக இரு சமூகத்தைச் சார்ந்தவர்களும் குற்றவாளியைக் கண்டுபிடிக்க உதவ வேண்டும்' என்றார். (ச)

## பூசகரின் சடலம் மீட்பு!

மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஒந்தாச்சிமடம் பகுதியில் பூசகர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மகிழூர் பகுதியைச் சேர்ந்த க.வீரக்குட்டி (வயது-61) என்பவரின் சடலமே மீட்கப்பட்டுள்ளது. களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து, நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை பூசகரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

## சிறுபோகத்தில் ஈடுபடாத விவசாயிகளுக்கு நஷ்டஈடு!

அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகப் பிரிவில் இம்முறை சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடாத விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அதன் பிரதிப் பிரதேச செயலாளர் ரீ.ஜே.அதிசயராஜ் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனைப் பிரதேச விவசாயக் குழுக் கூட்டம் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

வறட்சியால் ஏற்பட்டுள்ள தண்ணீர்ப் பற்றாக்குறை காரணமாக அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் ஆகிய பகுதிகளில் சுமார் 4 ஆயிரத்து 500 ஏக்கரில் இம்முறை சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கான அனுமதியை அம்பாறைப் பிராந்திய நீர்பாசனத் திணைக்களம் வழங்கவில்லை.

இவ்வாறு சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளாத விவசாயிகள் 2 ஆயிரத்து 600 பேருக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அட்டாளைச்சேனையில் செய்கை பண்ணப்படாமலுள்ள விவசாயக் காணிகளை விவசாயச் செய்கைக்கு உகந்ததாக மாற்றி அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை விவசாயத்திணைக்களத்துடன் இணைந்து முன்னெடுக்கஉள்ளோம்.

-என்றார். (ச)

## மூதூர் சிறுமிகளுக்கு நீதி கோரி: அம்பாறையிலும் ஆர்ப்பாட்டம்!



அம்பாறை,ஜூன் 09

திருகோணமலை - மூதூர் மல்லிகைத்தீவில் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட மூன்று சிறுமிகளுக்கு நீதி கோரி அம்பாறையில் நேற்று வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அம்பாறை இந்து ஆலயங்களின் ஒன்றியம், இளைஞர் கழகங்கள் மற்றும் விளையாட்டுக்கழகங்கள், பொது அமைப்புக்கள், ஊர் மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, 'நல்லாட்சி அரசே இதுதான் நீதியா?', 'அரசே மாணவ சமூகத்துக்கு சரியான நீதியை வழங்கு', 'பெண்கள் மீது வன்முறை கொள்வோரை மீளாச்சிறையில் அடை',



'மாணவ பிஞ்சுகளின் வாழ்க்கையை சீரழிக்காதே', 'இன்னும் எத்தனை மொட்டுக்கள் உதிருமோ?', '3 மொட்டுக்களையும் சூறையாடிய காமுகர்கள் எங்கே?' போன்ற சுலோகங்களைக் கொண்ட பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர். (ச)

## கிழக்கு பல்கலை சிங்கள மாணவரும் போராட்டம்!

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுமுன்தினம் புதன்கிழமை முதல் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தை கிழக்கு பல்கலைக் கழக சிங்கள மாணவர்கள் ஆரம்பித்துள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் பல்கலைக்கழக வளாகம் முழுவதும் கறுப்பு கொடிகளைக் கட்டி அங்கு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பட்டப்படிப்பைச் சரியான நேரத்தில் நிறைவு செய்ய வேண்டும், பல்கலைக்கழக வளாகத்தில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி. கமராக்கள் உடனடியாக அகற்றப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட ஐந்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. (ச)





## தாமரைக்கேணியில் குடிசை முற்றாக எரிந்து நாசம்!



ஏறாவூர், தாமரைக்கேணி பகுதியில் வயோதிபத் தம்பதியினர் வசித்து வந்த குடிசை ஒன்று நேற்றுமுன்தினம் புதன்கிழமை முற்றாக எரிந்து நாசம் அடைந்துள்ளது.

மின்னொழுக்கின் காரணமாகவே இந்தத் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தீ பரவிய போது குடிசைக்குள் யாரும் இல்லாத காரணத்தால் உயிராபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை. சம்பவம் தொடர்பில் ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச)

# இலங்கையில் மிகப் பெரிய மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படவுள்ளது பருத்தித்துறையில்!

## அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 09
இலங்கையின் மிகப்பெரிய மீன்பிடித் துறைமுகம் பருத்தித்துறையில் அமைக்கப்படவுள்ளது என்று கடற்றொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கில் மீன் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் பேசாலையிலும், பருத்தித்துறையிலும் இரண்டு மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கப்படும். இந்தத் திட்டத்துக்கான நிதியை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியுள்ளது.

1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் மொத்த உள்நாட்டு மீன் உற்பத்தியில் 40 சதவீதம் வடக்கில் இருந்தே பெறப்பட்டது. போர் நிலவிய 1983 இற்கும் 2009 இற்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தப் பங்களிப்பு 4 வீதமாக குறைவடைந்தது. தற்போது, இது 12 வீதமாக உள்ளது. இது திருப்தியான நிலை அல்ல.

வடக்கில் உள்ள மீனவர்கள் இன்னமும் பாரம்பரிய மீன்பிடி முறைகளையே பயன்படுத்துகின்றனர். அவர்களின் படகுகள் மிகப் பழைமையானவை. தென்பகுதியுடன் ஒப்பிடும் போது வடக்கில் மீன்பிடி 20-30 ஆண்டுகள் பின்தங்கியுள்ளன. தற்போது நவீன தொழில்நுட்ப முறைமைக்கு மாற்றி வருகிறோம்.

அண்மையில் மொறட்டுவ பல்கலைக்கழகம், பருத்தித்துறையில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கான சாத்திய ஆய்வை மேற்கொண்டது.

பருத்தித்துறை மீன்பிடித் துறைமுக அபிவிருத்திக்கு உள்ளூர் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தாலும், நான் அங்கு சென்று அவர்களுடன் கலந்துரையாடவுள்ளேன். இந்தத் திட்டம் தொடர்பான அவர்களின் கரிசனைகள் தீர்த்து வைக்கப்படும்.

எமது அதிகாரிகள் கடற்றொழில் அமைப்புகளுடன் பேச்சு நடத்தியுள்ளனர். இப்போது பலர் இந்தத் திட்டத்தை ஆதரிக்கின்றனர். இந்த திட்டத்துக்காக தனியார் நிலங்களை நாம் சுவீகரித்தால், அதற்கான இழப்பீடு வழங்கப்படும்.

மீன்பிடித்துறைமுகம் கட்டப்படுவதால் நேரடியாகவும், மறைமுகமாகவும் பெருமளவு வேலைவாய்ப்புக் கிடைக்கும். தெற்கில் இருந்து யாரையும் அங்கு வேலைக்கு அமர்த்தும் திட்டம் எம்மிடம் இல்லை. இந்த முயற்சியால் வடக்கில் உள்ள மக்களே பயனடைவார்கள்.

கடல்வள கைத்தொழில் பூங்கா ஒன்று மன்னாரில் உருவாக்கப்படவுள்ளது. 3ஆயிரம் ஏக்கரில் உருவாக்கப்படும் இந்தப் பூங்காவினால், 10 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க)

---

### முன்னெச்சரிக்கை நடவடிக்கை இல்லை:

## அதிகாரிகளின் பொறுப்பற்ற போக்கு; அமைச்சர் அகிலவிராஜ் அதிருப்தி



கொழும்பு, ஜூன் 09
அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவுகள் பற்றிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்காமல் உதாசீனம் செய்து வந்திருக்கும் அரச அதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மை பற்றி தனது அதிருப்தியை கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இயற்கை இடர்களால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள அக்குரஸ்ஸ, மொரவக்க, தெனியாய, கோட்டபொல, பிட்டபெத்தர மற்றும் பாஹியங்கல ஆகிய பிரதேசங்களுக்கு நேரடி விஜயங்களை மேற்கொண்டபோது அங்குள்ள நிலைமைகளை அவதானித்த பிறகே அமைச்சர் அரச அதிகாரிகள் மீதான தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சரியான திட்டங்களின்றி நிர்மாணிக்கப்படும் கட்டடங்கள், நீர் வழிந்தோடுவதற்கான வசதிகளின்றி வெள்ளம் தேங்கும் பகுதிகள் போன்றவை காரணமாகவே இயற்கை அனர்த்தங்கள் பெரும்பாலும் நடக்கின்றன.

அனர்த்தமொன்று ஏற்பட்ட பின் அதற்கான பொறுப்புகளை வேறொருவர் மீது சுமத்துவதை விடுத்து சரியான நேரத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளின் பொறுப்பாகும்.

வெள்ளப்பெருக்கால் பெரும்பாலான பாடசாலைகள் பாதிக்கப்பட்டமைக்கு அரச அதிகாரிகளின் அசமந்தப்போக்கே காரணம் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

நடந்துள்ள சேதத்தை ஒரு பாடமாகக்கொண்டு அவர்கள் எதிர்காலத்திலாவது பொறுப்புடன் செயற்படுவார்களென எதிர்பார்க்கிறேன் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

---

## நல்லிணக்கச் செயற்பாடுகள் தொடர்பாக ஐ.நா. செயலருக்கு விளக்கமளித்தார் பிரதமர்



கொழும்பு, ஜூன் 09
ஐ.நா. பொதுச்செயலர் அன்ரனியோ குரெரெசை சந்தித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இலங்கையில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பாக விளக்கமளித்துள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் கடந்த 5 ஆம் திகதி இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது உண்மை, நீதி, இழப்பீடு, மீள நிகழாமையை உறுதிப்படுத்தல், ஆகிய நான்கு தூண்களின் அடிப்படையில் இலங்கையில் மேற்கொள்ளப்படும் நல்லிணக்கச் செயற்பாடுகள் குறித்து ஐ.நா. பொதுச்செயலருக்கு விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

அரசமைப்பு சீர்திருத்தம் மற்றும் சட்ட மற்றும் ஏனைய நல்லிணக்கம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்தும் ஐ.நா. பொதுச் செயலருக்கு இலங்கைப் பிரதமர் விவரித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்களுக்கான உதவிச் செயலர் ஸ்டீபன் ஓ பிரையனும் பங்கேற்றார்.

---

## மஹிந்தவின் ஜப்பான் விஜயம் உத்தியோகபூர்வமானதல்ல


### அமைச்சர் ராஜித கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 09
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஜப்பான் விஜயம் உத்தியோகபூர்வமானதல்ல என அரசு அறிவித்துள்ளது.

ஜப்பான் இந்த விடயம் தொடர்பில் தெளிவாக குறிப்பிட்டுள்ளது என்றும் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-



அரசின் செலவில் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு மஹிந்த ராஜபக்ஷ ஜப்பான் சென்றுள்ளார் என போலியான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றது.

இதில் எவ்விதமான உண்மைத் தன்மையும் இல்லை. தனிப்பட்ட விஜயத்தைமேற்கொண்டு அவர் ஜப்பான் வந்துள்ளார் என அந்நாடும் அறிவித்துள்ளது.

மஹிந்தவும் அவரது குழுவினரும் சென்ற பயணங்களுக்கு அரசு எந்தக் கொடுப்பனவுகளையோ செலவுகளையோ செய்யவில்லை. தனிப்பட்ட சில காரணங்களுக்காக மஹிந்த குழுவினர் அங்குசென்றிருக்கலாம்.

எனவே தனிப்பட்ட விஜயத்தை அரச விஜயமாக போலி பிரசாரம் செய்வது கண்டிக்கப்பட வேண்டியது.- என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

---

## இறக்குமதி மீன்களுக்கான தீர்வை குறைவு!

கொழும்பு, ஜூன் 09
இறக்குமதி செய்யப்படும் மீன் கிலோ ஒன்றுக்கான தீர்வை 25 ரூபாவால் குறைக்கப்படவுள்ளது என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

75 ரூபாவாக உள்ள இந்த வரித் தொகை 50 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் மீன்பிடி நடவடிக்கைகள் ஸ்தம்பித்துள்ளமையுடன், நுகர்வோருக்கு அதிக நிரம்பலை வழங்கும் நோக்கில் குறித்த தீர்மானம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

மேலும், இலங்கைக்கு மாதாந்தம் 2 ஆயிரம் மெற்றிக் டொன் மீன்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. (க)

காலைக்கதிர்



## முன்னாள் பிரதி அமைச்சர் கருணாவுக்கு எதிராக முறைப்பாட்டைத் தாக்கல் செய்க

### குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நீதிவான் உத்தரவு

கொழும்பு, ஜூன் 09

முன்னாள் பிரதி அமைச்சர் கருணா என்ற விநாயகமூர்த்தி முரளிதரன் சுமார் ஒன்பது கோடி ரூபா பெறுமதியான குண்டு துளைக்காத வாகனத்தை அரசிடம் திரும்ப ஒப்படைக்காமல் பயன்படுத்தியமை தொடர்பில், அவருக்கு எதிராக முறைப்பாட்டைத் தாக்கல் செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதிவான் நேற்றுமுன்தினம் புதன்கிழமை குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

மேற்படி சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தி அதன் அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் சட்டமா அதிபரின் ஆலோசனை இன்னும் கிடைக்கவில்லை எனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் கூறியுள்ளனர்.

இதனைக் கவனத்தில் எடுத்த பின்னர் நீதிவான் மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளார். நேற்றுமுன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள கருணா நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

சந்தேகநபரான கருணா கடந்த டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி 10 லட்சம் ரூபா ரொக்கம் மற்றும் 50 லட்சம் ரூபா பெறுமதியான தலா 4 சரீரப் பிணைகளில் விடுதலை செய்யப்பட்டார்.

தாய்லாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட குண்டு துளைக் காத ஜீப் மட்டக்களப்பில் வாகனதிருத்தகம் ஒன்றில் இருந்து கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இனவாத செயற்பாடுகளுக்கு எதிராக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்!



### ஞானசாரரும் கைது செய்யப்படுவார் என்கிறார் அமைச்சர் ராஜித

சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் இனவாதச் செயற்பாடுகள் தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முஸ்லிம் மக்களுக்கு எதிராக தாக்குதல்களை முன்னெடுப்பவர்கள் யார் என்று எல்லோருக்கும் தெரியும். அவ்வாறு தாக்குதல்களை முன்னெடுப்பவர்களை கைது செய்தால் இது போன்ற இன மோதல்கள் இடம்பெறாது.

கடந்த ஆட்சிக் காலத்தின் போது அளுத்கம பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தையார் முன்னெடுத்தார்கள் என்று எல்லோருக்கும் தெரியும். அவர்கள்தான் தற்போது பல்வேறு இன மோதல்களை முன்னெடுக்கின்றனர். அவர்களை வெகு விரைவில் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விசேடமாக நான்கு பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, ஞானசார தேரரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஞானசார தேரர் கூறுகின்றமை போன்று தமிழ் முஸ்லிம் அரசியல்வாதிகள் இனங்களுக்கு இடையில் தாக்குதல்களை முன்னெடுக்கவில்லை. குறிப்பாக வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன், அவர் சார்ந்த சமூகம் தொடர்பான பிரச்சினைகளையும் அதற்கான தீர்வுகளையும் கேட்கின்றார். அது அவருடைய உரிமை. -என்றார். (ச)

## தினசரி ராசி பலன் 09.06.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் வைகாசித் திங்கள் 26 ஆம் நாள். பூரணைத்திதி மாலை 6.39 மணி வரை. பின்னர் பிரதமை. நட்சத்திரம்: கேட்டை பி.இ. 5.11 மணி வரை. பின்னர் மூலம். மரணயோகம் பி.இ.5.11 மணி வரை. பின்னர் சுபயோகம். ராகுகாலம்: பகல் 10.35 மணி முதல் 12.09 மணி வரை. சுபநேரம் மாலை 5.54 மணி முதல் 7.24 மணி வரை. இன்று பூரண விரதம். திவசம் செய்யவேண்டிய திதி. வைகாசிமாத பூரணை. பிறந்த நட்சத்திர வழிபாடு கேட்டை.

### 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** கவலையான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் வீண் சச்சரவுகளால் கவலை உண்டாகும். தொழிலில் கவனக்குறைவு ஏற்படும்.

**ரிஷபம்:** மத்திமமான பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். எண்ணிய காரியம் தாமதமாகும். தேகசுகம் பாதிப்புறும். குடும்ப அமைதி பேணப்படும்.

**மிதுனம்:** அனுகூலமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்துடன் சுற்றுலா சென்று மகிழும் வாய்ப்புக்கூடும். திருமண காரியங்கள் இலகுவில் கைகூடும்.

**கடகம்:** ஆக்கபூர்வமான நாள். வருமானம் வளமாக இருக்கம். உத்தியோகத்தர்களுக்கு உயர் மட்டத்தில் செல்வாக்குப் பெருகும். விட்டுப் பிரிந்த உறவுகள் மீண்டும் இணையும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** சலனம் மிகுந்த நாள். வரவேண்டிய பணம் வரத்தாமதமாகும். நண்பர்கள் பகைவர்களாக மாறுவார்கள். தொழிலில் பிரயாசை, அலைச்சல்கள் அதிகமாகும்.

**கன்னி:** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். வரவை மீறிய செலவுகள் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**துலாம்:** சுபீட்சமான நாள். பணபலம் அதிகரிக்கும். வீடு, வாகன வசதிகள் பெருகும். சமூகத்தில் செல்வாக்கு, மதிப்பு உயரும். சகோதர உறவு பலப்படும். உத்தியோக உயர்வு கிடைக்கும்.

**விருச்சிகம்:** அதிர்ஷ்டமான நாள். தனலாபம் பெருகும். பூர்வீக சொத்துகள் வந்துசேரும். வெளிநாடு செல்லும் யோகம் உண்டாகும்.

**தனுசு:** யோசனையான நாள். வருமானம் குறைவடையும். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். உறவினர்களுடன் பகைமை உண்டாகும்.

**மகரம்:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் அன்பு, பாசம் அதிகரிக்கும். சகோதர வழி உதவிகள் கிடைக்கும்.

**கும்பம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. வரவும், செலவும் சரிசமமாக இருக்கும். எடுக்கும் முயற்சிகள் தடை, தாமதமாகும்.

**மீனம்:** புகழ் மிக்க நாள். வருமானம் உயர்வடையும். கலைஞர்களின் புகழ் மேலோங்கும். மாணவர்களின் திறமையால் ஆசிரியர்களின் பாராட்டுகள் கிடைக்கும்.

சந்திராட்டம நாள்: மிருக சிரிடம் 3, 4 திருவாதிரை. புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்களில் பிறந்தோர் இன்று சுபகருமங்கள் ஆரம்பிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

## 150 கிலோ கடல் அட்டைகளுடன் யாழ்ப்பாணத்தில் இளைஞன் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 09

யாழ்ப்பாணம் பண்ணைப் பாலம் பகுதியில் விற்பனைக்காகக் கொண்டு செல்லப்பட்ட 150 கிலோ கடல் அட்டைகளுடன் இளைஞன் ஒருவரை நேற்று வியாழக்கிழமை அதிகாலை பொலிஸார் கைது செய்தனர்.

நாச்சிக்குடா முழங்காவில் பகுதியைச் சேர்ந்த இளைஞரே கைது செய்யப்பட்டவர் ஆவார்.

இந்தக் கடல் அட்டைகளை தீவகத்தில் இருந்து நாச்சிக்குடாவுக்குக் கொண்டு செல்லும் போதே கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த 150 கிலோ கடல் அட்டைகளும் பல லட்சம் ரூபா பெறுமதியானவை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

கடல் வள சட்டத்தின் பிரகாரம் கடல் அட்டைகளைப் பிடிப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 09

யாழ்ப்பாண மாவட்ட பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரியகுளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கலந்துரையாடலில் அனைத்துப் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு ஒன்றியத் தலைவர் கேட்டுள்ளார். (இ)

## வவுனியா பஸ் நிலையத்தில் மோதல்: இரண்டு பேர் காயம்; மக்கள் பதற்றம்!



வவுனியா, ஜூன் 09

வவுனியா மத்திய பஸ் நிலையத்தில் தனியார் மற்றும் இ.போ.ச. ஊழியர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் இருவர் காயமடைந்துள்ளனர். இதனால் பயணிகள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலை இடம் பெற்றுள்ளது.

பயணிகளை ஏற்றுவதில் இரு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட போட்டியே இந்த மோதலுக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் காயமடைந்த இருவரும் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியாபொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-100)

## கடும் சுழல்காற்று; 20 வீடுகள் சேதம்!


### பொம்மைவெளி, சோனகத் தெரு பகுதிகளில் பாதிப்பு

யாழ்ப்பணத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை வீசிய சுழல் காற்று காரணமாக சுமார் 20 வீடுகள் சேதமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


பொம்மைவெளி மற்றும் புதிய சோனகத் தெரு பகுதிகளில் அமைந்துள்ள சுமார் 20 வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டுள்ளன.

காற்றுடன் கூடிய மழை பெய்ததன் காரணமாக சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதிகளில் சில இடங்களில் மின் தடை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வீட்டு கூரைகள் காக்கி வீசப்பட்டதன் கா



ணமாக வாகனங்கள் சில சேதமடைந்துள்ளன என அந்த பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ச)



# தமிழர்கள் மத்தியில் இருப்பதை பெருமையாக நினைக்கிறேன்!

## தமிழகம் வந்த ராகுல் பெருமிதம்

எப்போதாவது தமிழகம் வந்து... வந்த வேகத்திலேயே திரும்பிப் போய் விடுவார் ராகுல் காந்தி.

பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகம் தேவைப்படும் என்பதால் அதிகாரிகளும் அவரை அனுமதிப்பதில்லை.

மிக நீண்ட இடைவெளிக்குப் பிறகு சென்னையில் இரண்டு நாள்கள் இருந்தார் ராகுல்.

இம்முறை அவரிடம் பல ஆச்சரிய மாற்றங்கள். பொதுவாகக் கருணாநிதியை ராகுலுக்குப் பிடிக்காது என்பார்கள்.

இதற்குமுன் தமிழகம் வந்த ராகுல், கருணாநிதியைச் சந்திப்பதைத் தவிர்த்திருக்கிறார். ஆனால், கருணாநிதி உடல்நிலை சரியில்லாமல் காவேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது, கருணாநிதியைச் சந்தித்தார்.


இப்போது கருணாநிதியின் சட்டமன்றப் பணிகள் வைர விழாவுக்கு வந்து அவரையும் ஸ்டாலினையும் பாராட்டித் தள்ளினார். இதில் தி.மு.க-வினரைவிட காங்கிரஸ்காரர்கள்தான் மகிழ்ச்சி அடைந்தனர்.

### வழமைக்கு மாறாக ராகுல்

காரணம், சத்தியமூர்த்தி பவனுக்கு ராகுல் வந்தது தான். ஆறாண்டுகளுக்குப் பிறகு ராகுல் அங்கு வந்து, கட்சிக்கொடியை ஏற்றி வைத்து, நிர்வாகிகளுடன் மனம்விட்டு உரையாடினார்.

இந்தச் சந்திப்பைத் தமிழக காங்கிரஸ் கட்சித்தலைவர் திருநாவுக்கரசர் நேர்த்தியாகத் திட்டமிட்டிருந்தார். 250 பேர் உட்காரும் அரங்கில் கோஷ்டி பேதமில்லாமல் மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகளைத் தேர்வுசெய்து அமர வைத்திருந்தார்.

என் சகோதரி பிரியங்காவுக்கு, ''நான் இப்போது அன்பிற்கினிய நம் தமிழர்களோடு இருக்கிறேன்'' என்று குறுஞ்செய்தி அனுப்பினேன். அதற்கு அவர், ''நானும் உங்களோடு இருக்கிறேன்'' என்று பதில் அனுப்பியிருக்கிறார். எனக்கு எப்போதும் தமிழர்கள் மீது அளவற்ற அன்பும் மரியாதையும் பாசமும் உண்டு. அதேபோன்று என் தந்தைக்கும் தமிழர்கள் மீது அளவற்ற அன்பும் பாசமும் இருந்தது.



நிர்வாகிகள் பலரும் ராகுலுடன் நெருங்கிக் கைகொடுத்து ஓரிரு வார்த்தைகள் பேச முயன்ற போது ராகுல் தன் பாதுகாப்பு அதிகாரிகளை விலகியிருக்கும்படி கூறிவிட்டு, நிர்வாகிகளோடு நெருங்கி, இயல்பாக உரையாடியிருக்கிறார்.

தமிழர்கள் மத்தியில் இருப்பதைப் பெருமையாக நினைக்கிறேன். எங்கள் குடும்பத்தாரோடு இருப்பதாகவே உணர்கிறேன். இவை வெறுமனே உதடுகளிலிருந்து உதிரும் வார்த்தைகள் அல்ல, ஆத்மார்த்தமாகச் சொல்கிறேன்.

என் சகோதரி பிரியங்காவுக்கு, ''நான் இப்போது அன்பிற்கினிய நம் தமிழர்களோடு இருக்கிறேன்'' என்று குறுஞ்செய்தி அனுப்பினேன். அதற்கு அவர், ''நானும் உங்களோடு இருக்கிறேன்'' என்று பதில் அனுப்பியிருக்கிறார்.

எனக்கு எப்போதும் தமிழர்கள் மீது அளவற்ற அன்பும் மரியாதையும் பாசமும் உண்டு. அதேபோன்று என் தந்தைக்கும் தமிழர்கள் மீது அளவற்ற அன்பும் பாசமும் இருந்தது.

### தமிழகத்தை நேசித்தார் என் பாட்டி இந்திரா காந்தியும்

தமிழகம் வந்து போவதில் அவ்வளவு மகிழ்ச்சி அடைவார். அதே போன்று தான் என் பாட்டி இந்திராவும், பாட்டியின் அப்பா நேருவும் தமிழகத்தை நேசித்தனர். தமிழகம் என் குடும்பத்தைப் போன்றது.



தமிழர்களுக்கு என்று ஒரு கலாசாரம் இருக்கிறது. பண்பாடு, நாகரிகம் இருக்கிறது. வீரம் இருக்கிறது. தமிழர்கள் என்றால் புலிகள் என்பதை நான் அறிவேன். (இப்படி மூன்று இடங்களில் சொன்னார்).

ஒருமுறை என் நண்பர்களிடம் அருகில் இருந்த ஒருவரைக் காட்டி, ''இவர் தென்னிந்தியர்'' என அறிமுகப்படுத்தினேன். அவர் கோபித்துக் கொண்டார். ''தவறாக ஏதும் கூறி விட்டேனா?'' எனக் கேட்டேன்.

''ஆமாம். அது என்ன தென்னிந்தியர்? ஒன்று இந்தியர் என்று அறிமுகப் படுத்துங்கள். அல்லது தமிழர் என்று அறிமுகப்படுத்துங்கள்'' என்று கூறினார்.

அவர் ஆதங்கத்தைப் புரிந்து கொண்டேன். அதற்கு மதிப்பளிக்கிறேன். அன்றிலிருந்து நான் யாரையும் ''தென்னிந்தியர்'' என்று பேசுவதே கிடையாது. ''இவர் தமிழ்நாட்டவர்'', ''இவர் ஆந்திர மாநிலத்தவர்'', ''இவர் கர்நாடகத்தைச் சேர்ந்தவர்'' என்றுதான் பேசி வருகிறேன்.

### மோடிக்கு புரியவில்லை

இந்தியா ஒரே நாடுதான் என்றாலும், இங்கே ஒவ்வொருவருக்கும் ஒரு பண்பாடு, கலாசாரம், வரலாறு, வீரம் என்று இருக்கின்றன. அதை நாம் ஏற்க வேண்டும். பிரதமராக இருக்கும் மோடிக்கு அது புரியவில்லை.

''நான் என்ன கலாசாரத்தைக் கொண்டிருக்கிறேனோ, அதை மற்றவர்கள் ஏற்க வேண்டும்'' என்று திணிக்கிறார். ''நான் என்ன பண்பாட்டை ஏற்றிருக்கிறேனோ, அதையே மற்றவர்கள் ஏற்க வேண்டும்'' என்கிறார்.

ஹிட்லரைப் போன்று நடந்து கொள்கிறார். இந்தக் கருத்துத் திணிப்பை நாம் எதிர்க்க வேண்டும். இந்தியாவின் தேசிய விலங்கு புலி. அதைப்போல உங்களது எதிர்ப்பைக் காட்ட வேண்டும்.

இங்கே பேசிய பலரும், நான் அடுத்தமுறை தமிழகம் வரும்போது பிரதமராகத்தான் வர வேண்டும் என்கிறார்கள். தேர்தலுக்கு இன்னும் இரண்டாண்டுகள் உள்ளன. அதுவரை நான் தமிழகம் வரக்கூடாதா என்ன? என்னால் அப்படி இருக்க முடியாது. இங்கே ஒன்றைப் புரிந்துகொள்ளுங்கள்.

### காமராஜர் ஆட்சியை அமைக்க வேண்டும்

அரசியல் கூட்டணி என்பது வேறு. தி.மு.கவோடு கூட்டணி இருக்கலாம். அ.தி.மு.கவோடு, கம்யூனிஸ்ட் கட்சிகளோடு, பாட்டாளி மக்கள் கட்சியினரோடு என்று பலருடனும் கூட்டணி வைத்துக் கொள்வது வேறு.

ஆனால் நமது நோக்கம், ''தமிழகத்தில் காமராஜர் ஆட்சியை அமைக்க வேண்டும்'' என்பதே. அதற்கேற்ப நம் கட்சியின் செயற்பாடு இருக்க வேண்டும். எல்லோரும் கிராமங்களை நோக்கிச் செல்லுங்கள்.

''மத்திய அரசின் நடவடிக்கையால் துன்பத்தில் தவிக்கும் மக்களைச் சந்தித்துப் பேசுங்கள். என்னையும் அழையுங்கள். உங்களோடு சேர்ந்து கிராமம் கிராமமாகச் செல்ல ஆவலாக இருக்கிறேன்'' என்றெல்லாம் பேசியிருக்கிறார் ராகுல்.

ராகுல் காந்தியின் இந்தச் சந்திப்பும் பேச்சும், கட்சி நிர்வாகிகளுக்கு இன்ப அதிர்ச்சி. ''இதற்கு முன்பு இப்படி ராகுல் பேசியதே இல்லை. இந்த முறை தொண்டர்களின் இதயங்களைத் தொட்டு விட்டார்'' என்கிறார்கள்.

நன்றி: இணையம்




பொன்.வேணு கிருஷ்ணா

**சீனா-இந்தியா மற்றும் இந்தியா-பாகிஸ்தான் மோதல்கள் பலதசாப்தங்கள் வரலாறு கொண்டவையாகும்**

சீனா-இந்தியா மற்றும் இந்தியா-பாகிஸ்தான் மோதல்கள் பலதசாப்தங்கள் வரலாறு கொண்டவையாகும். **ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியமானது, அதன் பொருளாதார வீழ்ச்சியின் பின் விளைவுகளில் இருந்து தப்பிப்பதற்கான**



முனைப்பிலும் யூரோசியா மீது மூர்க்கத்தனம் மற்றும் போரின் மூலமாக தனது மேலாதிக்கத்தை திட்டவட்டம் செய்வதற்காகவும் தெற்காசியாவில் புவியரசியல் பதற்றங்களின் வளர்ச்சிக்கு எரியூட்டி வந்திருக்கிறது.


பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பாக, மத்திய கிழக்கில் ஆட்சிகளை-மாற்றுவதற்கும் ஆப்கானிஸ்தானில் ஒரு மூலோபாய பிரசன்னத் தளத்தை உருவாக்குவதற்கும் அமெரிக்கா ''பயங்கரவாதத்திற்கு எதிரான போர்'' என்று சொல்லப்பட்டதை பயன்படுத்திக் கொண்டிருந்த சமயத்தில், பென்டகனும் சிஐஏ யும் இந்தியாவை ஒரு ''மூலோபாய பரிசு'' என்று ஏற்கனவே ஊக்குவித்துக் கொண்டிருந்தன. அதன் மிகப்பெரும் இராணுவம், அதிகரிக்கும் பொருளாதார வலிமை மற்றும் உலகின் மிக முக்கியமான வர்த்தக கடல்வழித் தடமான இந்தியப் பெருங்கடலில் ஆதிக்கம் செலுத்துவதற்கு ஒரு அனுகூலப் புள்ளியாக சேவைசெய்யும் ஆற்றல்வளம் ஆகியவற்றின் காரணத்தில் ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் அமெரிக்க சக்திக்கு வலுவூட்டுவதற்கான ஒரு தனித்துவமான இடத்தில் இந்தியா அமைந்திருந்ததாக அவை கூறின.

அப்போதிருந்தே இந்தியாவை சீனாவுக்கு எதிரான தன் இராணுவ-மூலோபாயத் தாக்குதலில் ஒரு ''முன்னிலை'' அரசாக மாற்றுவதற்கான முயற்சியில் எந்தவொரு சிறு வாய்ப்பையும் கூட அமெரிக்கா தவறவிட்டதில்லை. ஜனநாயகக் கட்சி நிர்வாகமென்றாலும் குடியரசுக் கட்சி நிர்வாகமென்றாலும் ஒரேபோல, இந்தியா மீது மூலோபாய அனுகூலங்களை பொழிந்தே வந்திருக்கின்றன: ''இந்திய-அமெரிக்க உலக மூலோபாய கூட்டணி'' வலுப்படுத்துவதற்கு புஷ் நிர்வாகம் உலக அணு வர்த்தகத்தில் இந்தியாவிற்கு ஒரு தனி இடம் தேடிக் கொடுத்தது. ஒபாமாவின் கீழ், இந்தியா ஒரு ''முக்கிய பாதுகாப்பு கூட்டாளியாக'' அறிவிக்கப்பட்டு, அமெரிக்கா அதன் நெருங்கிய கூட்டாளிகளுக்கு மட்டுமே தரக்கூடிய முன்னேறிய ஆயுதங்களுக்கான அணுகல் அதற்கு வழங்கப்பட்டது.



இந்திய-அமெரிக்கக் கூட்டணியானது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் ''பயங்கரவாத சமநிலை''யைப் புரட்டிப்போட்டிருக்கிறது. பனிப் போரின் காலத்தில், அமெரிக்காவின் பிரதான பிராந்தியக் கூட்டாளியாக பாகிஸ்தான் இருந்தது. ஆனால் கடந்த தசாப்தத்தின் காலத்தில், அது ஒரு 'ஏழை உறவுப்பையனாக' குறைக்கப்பட்டு விட்டது.

மோடி மற்றும் அவரது இந்து மேலாதிக்கவாத பாரதிய ஜனதா கட்சியின் கீழ், இந்தியா, தனது அதிகரித்துச் செல்லும் மூலோபாய அனுகூலத்தையும் சீன-எதிர்ப்புக் கூட்டணியை விஸ்தரிக்க அமெரிக்கா கொண்டிருக்கும் விருப்பத்தையும் பாகிஸ்தானை நோக்கி ஒரு வம்பிழுப்பான கொள்கையைப் பின்பற்றுவதற்கு அனுகூல மாக்கிக் கொள்ள முனைந்து வருகிறது. சென்ற செப்ரெம்பரில், இந்தியாவின் விசேடப் படைகள் ஒரு சட்டவிரோத எல்லை-கடந்த தாக்குதலை நடத்துவதற்கு உத்தரவிட்டதன் பின்னர், மோடி, பாகிஸ்தான் விடயத்தில் இந்தியா மூலோபாயரீதியாக ஒதுங்கியிருந்த காலம் எல்லாம் முடிவுக்கு வந்துவிட்டதாக அறிவித்தார்.




**இந்திய-அமெரிக்க கூட்டணியானது சீனாவுக்கு ஒரு அதிகரித்த, திட்டவட்டமான அச்சுறுத்தலாகவும் ஆகியிருக்கிறது**

இந்திய-அமெரிக்க கூட்டணியானது சீனாவுக்கு ஒரு அதிகரித்த திட்டவட்டமான அச்சுறுத்தலாகவும் ஆகியிருக்கிறது. இராஜதந்திரரீதியாகவும் இராணுவரீதியாகவும் இந்தியாவை முன்னெப்போதிலும் முழுமையாக சீனாவுக்கு எதிரான அமெரிக்க முனைப்பின் பின்னால் மோடி நிறுத்தியிருக்கிறார். தென்சீனக் கடலில் இந்தியா இப்போது அமெரிக்க நிலைப்பாட்டையே ஒப்பிக்கிறது; அமெரிக்காவின் பிரதான பிராந்தியக் கூட்டாளிகளான ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுடன் இருதரப்பு மற்றும் முத்தரப்பு மூலோபாய உறவுகளை அது மிகப்பெருமளவில் விஸ்தரித்திருக்கிறது; பென்டகன் அதன் போர் விமானங்கள் மற்றும் போர்க்கப்பல்களுக்கு எரிபொருள் நிரப்பவும் பழுது பார்க்கவும் தனது வான் தளங்களையும் துறைமுகங்களையும் முழுமையாகத் திறந்து விட்டிருக்கிறது. சீனக் கப்பல் மற்றும் நீர்மூழ்கிகளது நடமாட்டங்களை அமெரிக்க மற்றும் இந்திய இராணுவங்கள் பகிர்ந்து கொள்வதாக அமெரிக்க பசிபிக் கட்டளையகத்தின் தலைவரான அட்மிரல் ஹாரி ஹாரிஸ் சமீபத்தில் கூறியிருந்தார்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் சீனாவுக்கும் இடையிலான மோதலுடன் இந்திய-பாகிஸ்தான் மற்றும் சீன-இந்திய மோதல்களும் ஒன்றுகலப்பதானது அணு ஆயுதச் சக்திகளுக்கு இடையில் ஏற்கனவே வெடிப்புடன் இருக்கும் மோதல்களுக்கு மேலும் வெடிமருந்து சேர்ப்பதாக இருக்கிறது.

இந்திய-அமெரிக்கக் கூட்டணியின் மூலம் ஒரு பொதுவான அச்சுறுத்லுக்கு முகம்கொடுக்கும் பாகிஸ்தானும் சீனாவும் தமக்கு இடையிலான நீண்டகால இராணுவ-மூலோபாய மற்றும் பொருளாதார உறவுகளை வலுப்படுத்தச் சென்றுள்ளன. 50 பில்லியன் டொலர் சீனாபாகிஸ்தான் பொருளாதார வழித்தடத் திட்டம் இதற்கு மிகச் சிறந்த உதாரணமாகும்; இது மேற்கு சீனாவை அரேபியக் கடல் துறைமுகமான குவடார் உடன் இணைக்கும், அதன்மூலம் இந்தியப் பெருங்கடல் மற்றும் தென்சீனக் கடலின் பல சந்திப்புமுனைகளை கைப்பற்றுவதன் மூலம் சீனாவின் மீது ஒரு பொருளாதார முற்றுகையைத் திணிக்கும் பென்டகனின் மூலோபாயத்தை பகுதியாக சமாளிப்பதற்கான ஒரு வழிவகையை இது சீனாவுக்கு வழங்கும்.



இவ்வாறாக தெற்காசியா அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் கூட்டணி கொண்டிருக்கும் இந்தியா மற்றும் சீனா ஆதரிக்கும் பாகிஸ்தான் இடையில் மேலும்மேலும் அதிகமாய் புவியரசியல் ரீதியாக துருவப்படுவதாக ஆகிக் கொண்டிருக்கிறது.

(கேள்வி தொடரும்)

காலைக்கதிர்





# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




171

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

### இடைக்கால நிர்வாகம் பற்றிக் கோரிக்கை

2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எனது கடிதத்துக்கு எழுதிய விவரமான பதிலில் தமது யோசனைத் திட்டத்தை நியாயப்படுத்த முனைந்தார். அரசு முன்மொழிந்த அபிவிருத்தி சபைக் கட்டமைப்பில் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான போதுமான அதிகாரங்கள் இருக்கின்றன என வாதாடினார். அதன் கட்டுமானத்தை மேலும் விரிவாக்கம் செய்வது குறித்து இரு தரப்பும் பேச்சுகளை நடத்தலாமென்றும் யோசனை தெரிவித்தார். ஒட்டுமொத்தத்தில், அவரது பதில் கடிதத்தில் உருப்படியான புதிய யோசனைகள் எவையும் இருக்கவில்லை.. இதனை அவருக்கு தெளிவுபடுத்தி, ஜூன் மாதம் நான்காம் திகதி இன்னொரு கடிதத்தையும் நான் எழுத வேண்டியிருந்தது.

ரணில் விக்கிரமசிங்க யோசனைத் திட்டங்களையும், அவரது கடிதங்களின் உள்ளடக்கத்தையும் கவனமாகப் பரிசீலித்துப் பார்த்தபொழுது எமக்கு ஓர் உண்மை புலனாகியது. அதாவது, உருப்படியான அரசியல் அதிகாரங்களைக் கொண்டதாகச் செயற்திறனுடன் இயங்கக் கூடிய ஒரு புதுமையான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை விக்கிரமசிங்கவின் அரசால் உருவாக்க முடியாது என்பதை நாம் உணர்ந்து கொண்டோம். சர்வ அதிகாரங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கும் ஜனாதிபதியின் தலையீட்டுக்குப் பயந்து, சிறிலங்காவின் அரசியல் யாப்பு என்ற இருட்டறைக்குள் நின்று தடுமாறிக் கொண்டிருந்ததால் ரணிலின் ஆட்சிப் பீடத்தால் புதுமையாகச் சிந்திக்கவோ அன்றி துணிந்து செயற்படவோ முடியவில்லை. இந்தச் சூழ்நிலையில் விக்கிரமசிங்கவுடன் தொடர்ந்து கருத்துப் போர் நடத்துவதில் அர்த்தமில்லை என எமக்குத் தோன்றியது.

சமாதானப் பேச்சுகளை நாம் இடைநிறுத்தம் செய்ததும், டோக்கியோ மாநாட்டைப் பகிஷ்கரிப்பதும், ரணில் விக்கிரமசிங்கவின் இடைக்கால யோசனைகளை நிராகரித்து வந்ததும், சமாதான முயற்சியில் விடுதலைப் புலிகளுக்கு ஆர்வமில்லை என்ற ஒரு தவறான, எதிர்மறையான கருத்து சர்வதேச இராஜதந்திர வட்டாரங்களில் பரவலாமென எமக்கு அச்சம் எழுந்தது. இப்படியான தவறான எண்ணத்தை முறியடிப்பதாயின், அரசிடம் இருந்து யோசனைகளை நாடி நிற்காமல், ஒரு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான உருப்படியான திட்டத்தை நாமாகவே வரைந்து அரசிற்கு சமர்ப்பிப்பதே சாலச் சிறந்ததெனப் பிரபாகரன் தீர்மானித்தார். புலம்பெயர்ந்த தமிழ் சமுதாயத்திலுள்ள தலைசிறந்த அரசியலமைப்பு நிபுணர்கள், கல்விமான்களை அணி சேர்த்து நல்லதொரு யோசனைத் திட்டத்தை வரைவதெனவும் அவர் முடிவெடுத்தார். இதற்கான மாநாடு ஒன்றைக் கூடிய விரைவில் ஐரோப்பாவில் கூட்டுவதெனவும் முடிவாகியது.

இது இவ்வாறிருக்க, 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9-10 ஆம் நாள்களில், உதவி வழங்கும் நாடுகளின் சர்வதேச மாநாடு டோக்கியோ நகரில்



இடம்பெற்றது. 51 நாடுகளையும், 22 சர்வதேச நிறுவனங்களையும் சேர்ந்த அமைச்சர்களும் பிரதிநிதிகளும் இந்த மாநாட்டில் பங்கு கொண்டனர்.

ஜப்பான் பிரதமர் கொய்சுமி, சிறிலங்காவின் பிரதமர் விக்கிரமசிங்க ஆகியோர் வரவேற்புரை நிகழ்த்தினர். அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே ஆகிய நாடுகள் இணைத் தலைமைகளாக அந்த மாநாட்டில் கலந்து கொண்டன. நான்கு ஆண்டு காலத்துக்கு சிறிலங்காவின் புனர்நிர்மாணத்துக்கும் அபிவிருத்திக்குமாக 4.5 பில்லியன் டொலர்களை உதவியாக வழங்க அந்த மாநாட்டில் உறுதி அளிக்கப்பட்டது.

இந்த மாநாட்டு முடிவில் 'சிறிலங்காவின் புனர்நிர்மாண, அபிவிருத்திக்கான டோக்கியோ பிரகடனம்' என்ற ஆவணம் வெளியிடப்பட்டது. வெளிநாட்டு நிதியுதவியையும் பேச்சுகளின் முன்னேற்றத்தையும் இணைக்கும் அம்சமே இந்தப் பிரகடனத்தின் மையக் கோட்பாடாக அமைந்தது. பிரகடனத்தின் 18 ஆவது பந்தி இதனை நன்கு தெளிவுபடுத்தியது.

*''ஒஸ்லோவில் இரு தரப்பினரும் இணங்கிய இலட்சியத்தை நிறைவு செய்யும் வகையில், பேச்சுகளில் ஏற்படும் முன்னேற்றத்துடன் உதவி வழங்கும் நாடுகளின் நிதியுதவியும் இணைந்ததாக அமைய வேண்டும். புனர்நிர்மாண, அபிவிருத்தி வேலைகளைக் கையாளுவதற்கு உகந்ததான ஓர் இடைக்கால நிர்வாக கட்டமைப்பை உருவாக்க சிறிலங்கா அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் விரைவில் பேச்சுகளில் ஈடுபடுவதை இந்த மாநாடு விரும்புகிறது.''* என இப்பந்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசியல் தீர்வு எட்டப்படும் ஒரு பொருத்தமான தருணத்தில், படிப்படியாக நெருக்கடியைத் தணிப்பது பற்றியும் ஆயுதக் கையளிப்புப் பற்றியும் சிறலங்கா அரசும் விடுதலைப்புலிகளும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்றும் இப்பந்தியில் கூறப்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23 ஆம் நாள், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் வெளியிட்ட அதிகாரபூர்வமான அறிக்கையில், டோக்கியோ மாநாட்டுப் பிரகடனத்தை நிராகரித்தது. இந்தப் பிரகடனம் எந்த வகையிலும் எம்மைக் கட்டுப்படுத்தாது என விடுதலைப் புலிகள் திட்டவட்டமாக அறிவித்தனர்.

*''டோக்கியோ பிரகடனத்திலுள்ள தீர்மானங்கள், யோசனைகள் குறித்து எம்முடன் கலந்தாலோசிக்கப்படவில்லை. கொழும்பு அரசு, அனுசரணையாளரினதும், தனது நேச நாடுகளினதும் உதவியுடன் தயாரித்த இந்தத் தந்திரோபாய ஆவணம் வாயிலாகத் தனது தனிப்பட்ட திட்டத்தை விடுதலைப் புலிகள் இயக்கம் மீது திணிக்க முயல்கிறது. இதனை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.''* என்று எமது இயக்கத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இனப் பிரச்சினையானது இரு தரப்பினராலும் தீர்த்து வைக்க வேண்டிய உள்நாட்டு அரசியல் விவகாரம் என்றும், இதில் எமது பிராந்தியத்துக்கு அப்பாலுள்ள வெளிநாட்டுச் சக்திகளை அநாவசியமாகத் தலையீடு செய்ய அனுமதித்தமைக்கு விக்கிரமசிங்க அரசை புலிகளின் அறிக்கை கடுமையாகச் சாடியது.


அரசியலிலும் பொருளாதாரத் துறையிலும் தெளிவான கொள்கை எதுவுமற்ற சிந்தனை வறட்சி காரணமாக, தனது அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ரணிலின் அரசு சர்வதேச உலகத்திடம் சரணாகதி அடைந்துள்ளதாகவும் விடுதலைப் புலிகள் கண்டனம் தெரிவித்தனர். இந்த நிலைப்பாடு காரணமாக, சமாதான முயற்சியானது மூன்றாம் தரப்பு அனுசரணையாளரிடம் இருந்து பலம் பொருந்திய வெளிநாட்டுச் சக்திகள் ஆதிக்கம் செலுத்தும் சர்வதேச நடுவர் அரங்கிற்குக் கைமாறி இருப்பதாகக் குற்றம் சுமத்திய விடுதலைப் புலிகள், பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என எச்சரித்தனர்.


இது இவ்வாறிருக்க, ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை வரைவதற்காக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஓர் அரசமைப்பு விவகாரக் குழுவை நியமித்தார். இந்தக் குழுவில், சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சொர்ணராஜா, முன்னாள் சட்டவாளர் நாயகம் சிவா பசுபதி, விடுதலைப் புலிகளின் சட்ட ஆலோசகர் உருத்திரகுமாரன், சிட்னிப் பல்கலைக் கழகப் பேராசிரியர் கலாநிதி மனுவேல்பிள்ளை போல் டொமினிக், மலேசியா தேசியப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ராமசாமி, சட்ட நிபுணர் விஸ்வேந்திரன், பொருளாதார அபிவிருத்தித்துறை நிபுணர் கலாநிதி மகேஸ்வரன் ஆகியோர் அடங்குவர். 2003 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாத இறுதிப் பகுதியில் பாரிஸ் நகரில் சந்தித்த இந்த அரசமைப்பு நிபுணர்கள் குழு, வடக்கு, கிழக்கிற்கான ஓர் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தை உருவாக்கியது.

இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை (Interim Self-Governing Authority) ஒரு புதுமையான நிர்வாகக் கட்டமைப்பாக உருவாக்கப்பட்டது. உருப்படியான அதிகாரங்களைக் கொண்டதாகவும், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனர்நிர்மாணம், அபிவிருத்தி வேலைகளைத் திறம்படச் செயற்படுத்தும் நிர்வாக வலுவுடையதாகவும் இது அமையப் பெற்றது. இந்த யோசனைத் திட்டம், விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தினது அங்கீகாரத்தைப் பெற்றதை அடுத்து, நோர்வே அனுசரணையாளர்கள் மூலம் 2003 ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் முதலாம் திகதி விக்கிரமசிங்கவின் அரசிற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. எமது யோசனைத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு சரியாக நான்கு நாள்களுக்குப் பின்னர், மூன்று முக்கிய அமைச்சர்களைப் பதவி நீக்கி, ஜனாதிபதி சந்திரிகா விக்கிரமசிங்கவின் நிர்வாகம் மீது பழிதீர்த்துக் கொண்டார். பாதுகாப்பு அமைச்சர் திலக் மாறப்பான, உள்விவகார மந்திரி ஜோன் அமரதுங்கா, ஊடக அமைச்சர் யக்ஜீர் ஆகியோரே பதவி பறிக்கப்பட்டவர்களாவர். 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7 ஆம் நாளன்று ஒரு விசேட வர்த்தமானி அறிவிப்பு மூலம் நாடாளுமன்றத்தைக் கலைத்தார் ஜனாதிபதி. இந்த இறுதி நடவடிக்கையுடன் ரணில் விக்கிரமசிங்காவின் ஆட்சி முடிவுக்கு வந்தது.

(தொடரும்...)








மானிப்பாய் இந்துக்கல்லூரி நாடகமன்ற மாணவர்களால் வெளியிடப்பட்ட 'முயற்சி' எனும் நாடகபிரதிகளின் நூல் வெளியீட்டு விழா கல்லூரியின் வி.எஸ்.துரைராஜா திறந்த வெளி அரங்கில் நாடக மன்றத்தின் தலைவர் தி.திஸ்னுகன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (எ-54)





ஸ்ரீ இராமச்சந்திர மிஷன் தொண்டு நிறுவனத்தின் அனுசரணையில் வைத்தியர் ராஜேஸ்வரி ஈஸ்வரநாதனால் சங்கத்தானை சாரதா சனசமூக நிலைய கட்டடத்தில் பாரிசவாத நோய் உட்பட்ட பல்வேறுபட்ட நோய்த் தாக்கங்களுக்கு உட்பட்டவர்களுக்கு பிரதிபலிப்புச் சிகிச்சைப் பயிற்சி அண்மையில் வழங்கப்பட்டது. நிகழ்வில் ஸ்ரீ இராமச் சந்திர மிஷனின் வடமாகாண பொறுப்பாளர் குமுதினியும் கலந்து கொண்டார். (எ-21)

யாழ் மரியன்னை பேராலயத்துக்கு அண்மையில் மத்தியூஸ் வீதியிலுள்ள குளத்தின் அருகே தொடர்ந்து குப்பைகளை கொட்ட வருவோரைக் கட்டுபடுத்த முடியாத நிலையில் கிறீன் பீல்ட் சன சமூக நிலையத்தினர் யாழ் மாநகர சபை ஆணையாளரிடம் இதனை கண்காணிக்க 'கமரா'க்களை பொருத்தி உதவுமாறு கேட்டிருந்தனர். இதற்கமைவாக யாழ். மாநகர சபையினர் மூன்று கண்காணிப்புக் 'கமரா'க்களைப் பொருத்தி உள்ளனர். (இ)







சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 - B 1 12 ஆவது வருடாந்த கருத்தரங்கு சனி, ஞாயிறு இரு தினங்களில் தெல்லிப்பழை ராஜேஸ்வரி மண்டபத்தில் மாவட்ட ஆளுநர் லயன் டாக்டர் வி.தியாகராசா தலைமையில் இடம்பெற்றது. (எ)







காலைக்கதிர்



## ஈழத் தமிழர் ஆதரவுச் செயற்பாட்டாளர்களின் விடுதலையை வலியுறுத்தி நேற்று ஆர்ப்பாட்டம்!




யாழ்ப்பாணம், ஜூன் 09

தமிழகத்தில் குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள, ஈழத் தமிழர் ஆதரவுச் செயற்பாட்டாளர்களான திருமுருகன் காந்தி மற்றும் மே 17 இயக்கத்தினரின் விடுதலையை வலியுறுத்தி, யாழ்.மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்று வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஷ் பிரேமச்சந்திரன் உட்பட பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது,'நினைவேந்தல் செய்தவர்கள் குண்டர்களா?', 'நினைவேந்தல் செய்வது தமிழர்களின் உரிமை!', 'தமிழக அரசே நசுக்காதே', 'ஈழத்தமிழர்களின் ஆதரவாளர்களை விடுதலை செய்', போன்ற சுலோகங்களைக் கொண்ட மட்டைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தலை சென்னை மெரினா கடற்கரையில் அனுஷ்டித்தமைக்காக மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி, தமிழர் விடியல் கட்சியின் தலைவர் உள்ளிட்ட நான்கு பேர் தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் மீது குண்டர் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

### உலக யோகா தின விழா ஞாயிறன்று

யாழ்.நீரிழிவுக்கழகமும் கிறீன்பீல்ட் சனசமூகநிலையமும் இணைந்து நடத்தும் உலக யோகா தின விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு குருஷோ வீதியிலுள்ள கிறீன் பீல்ட் மண்டபத்தில் இடம்பெறும்.

நிகழ்வில் தலைமையுரையை வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளையும், ஆசியுரையை யாழ்.பேராலயப் பங்குத் தந்தை அருட்பணி சி.நேசராஜா அடிகளாரும் யோகா பற்றி விரிவுரையை தமிழகத்தைச் சேர்ந்த மனவளக் கலைப் பேராசிரியர் எஸ்.இந்திராவும் நிகழ்த்துவர். (இ)

### விசாகப் பொங்கல்

தையிட்டி, காங்கேசன் துறை வீதி ஞானவைரவர், கண்ணகை அம்மன் ஆலய வைகாசித் திங்கள் (விசாகப் பொங்கல்) விழாவும் ஞானவைரவர் ஆலயத்துக்கு அத்திபாரம் போடுதலும் எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 11.52 மணிக்கு ஆரம்பமாகும். (இ)

### யாழ்.கில்னர் ஒழுங்கை அம்பாளுக்கு நாளை கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 09

வண்ணை கில்னர் ஒழுங்கை ஸ்ரீ மகா மாரி அம்மன் தேவஸ்தான மண்டலாபிஷேகப் பூர்த்தியை முன்னிட்டு. இன்று வெள்ளிக்கிழமை அம்பாளுக்கு சங்காபிஷேகமும், விசேட பூஜையும் மாலை திருவூஞ்சலும் இடம்பெறும்.

நாளை சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் மகாமாரி அம்பாளின் வருடாந்த அலங்கார உற்சவம் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தமும், 26 ஆம் திகதி ஞாயிறு சங்காபிஷேகம், பூங்காவனத்துடன் உற்சவம் நிறைவு பெறும். (இ)

### அமைச்சுகளுக்கு புதிய செயலர்கள்

கொழும்பு, ஜூன் 09

அமைச்சுகள் சிலவற்றுக்கு புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன்படி சுகாதார அமைச்சின் செயலாளராக உதய ஆர். செனவிரத்னவும், பெற்றோலியத்துறை அமைச்சின் செயலாளராக உபாலி மாரசிங்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மகாவலி அமைச்சின் செயலாளராக அநுர திஸாநாயக்க, நீர்ப்பாசனத் துறை அமைச்சின் செயலாளராக ஜயந்த விஜயரத்ன மற்றும் தொழிலாளர் அமைச்சின் செயலாளராக என்.சரணதிஸ்ஸ, போக்குவரத்து அமைச்சின் செயலாளராக ஜி.எஸ். விதானகே, பெருந்தோட்டத்துறை அமைச்சின் செயலாளராக ஜே.ஏ.ரஞ்சித், விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின் செயலாளராக சிராணி வீரகோன், பிரதேச அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக ஏ.பீ.ஜீ.கித்சிறி, அபிவிருத்தி பணிகள் அமைச்சின் செயலாளராக எல்.டீ.சேனநாயக்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ம)

## ஈழ ஆதரவாளர்களை கைது செய்கின்றமையை தமிழக அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும்!

### முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் வலியுறுத்து



ஈழத்தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கிறோம் எனக் கூறும் தமிழக அரசு, ஈழத்தமிழ் ஆதரவாளர்களைக் கைது செய்கின்றமையை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.


குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள திருமுருகன் காந்தி மற்றும் அவரது ஆதரவாளர்களின் விடுதலையை வலியுறுத்தி யாழில் நேற்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஈழத்தமிழ் மக்கள் தங்களது உரிமைகளுக்காகவும், அரசியல் தீர்வுக்காகவும் போராடிக் கொண்டிருக்கின்றனர். இந்தச் சூழ்நிலையில், இனப்படுகொலையை நினைவு கூர்ந்தமைக்காக ஈழத்தமிழ் ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை அனைவரையும் வேதனைக்கு உள்ளாக்கியுள்ளது.

இவ்வாறான கைதுகள் தவிர்க்கப்பட வேண்டும். குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட திருமுருகன் காந்தியும், அவரது ஆதரவாளர்களும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.-என்றார். (ச)

### உலக சுகாதார தினத்தை முன்னிட்டு முல்லை. வைத்தியர்கள் சிரமதானம்!



முல்லைத்தீவு, ஜூன் 09

உலக சுகாதார தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு வைத்தியர்களால் நேற்று வியாழக்கிழமை சிரமதானப் பணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு வைத்தியர் சங்கத்தின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட இந்த சிரமதானத்தில் மாஞ்சோலை வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள், பணியாளர்கள் மற்றும் குமாரபுரம் பொது மக்கள் ஆகியோர் ஈடுபட்டனர்.

இதன்போது, மாஞ்சோலை வளாகம் தொடக்கம் முல்லைத்தீவு நகரம் வரை காணப்பட்ட தேவையற்ற கழிவுப்பொருள்கள் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்கள் அனைத்தையும் அகற்றும் நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டனர். (ச)

## பட்டதாரிகளின் போராட்டம் நீடித்தால் மாணவர்களின் கல்வியும் பாதிக்கும்!

### சுட்டிக்காட்டுகிறது தமிழர் ஆசிரியர் சங்கம்

பல மாதங்கள் கடந்து நடைபெறும் வேலையில்லாப் பட்டதாரிகளின் போராட்டத்தால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாடசாலைக்கல்வி பெரும் பின்னடைவைச் சுமக்கப்போகின்றது. ஏற்கனவே க்டைசி இடங்களில் உள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இனிமேலும் பெரும் பின்னடைவைச் சந்திக் குமாக இருந்தால் கல்வி யில் மட்டுமல்ல அனைத்து விடயங்களிலும் பின் னோக்கிச் செல்லும். என இலங்கைத் தமிழர் ஆசி ரியர் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

இது தொடர்பில் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது.

பட்டதாரிகளின் போராட்டத்திற்கு உரிய தீர்வு விரைவாக வழங்கப்படவேண்டும். இத்தகைய போராட்டம் நீண்டு செல்வதால் பாடசாலை மாணவர்களிடையே பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்ற உத்வேகம் இல்லாமல் போய்விடும் ''நாங்களும் பல்கலைக்கழகம் சென்று படித்து விட்டு இப்படித் தானே வேலைக்காக வீதியில் படுத்துறங்க வேண்டி வரும்'' என்ற கருத்து பாடசாலை மாணவர்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனை ஆசிரியர்களிடம் நேரடியாக மாணவர்கள் கூறிவருகின்றனர்.

''பல்கலைக்கழகம் செல்லும் நோக்கை நீங்கள் இலக்காகக் கொள்ள வேண்டும்'' என்ற ஆசிரியர்களின் கருத்துக்கு மாணவர்கள் செவிசாய்க்காது, ''எமது நாட்டில் பல்கலைக்கழகத்தில் படித்து வெளியேறிய பின்னர் அடுத்தது என்ன? எம்மை கஷ்டப்பட்டு படிப்பித்த பெற்றோர்களுக்கு நாம் அதன் பின்னரும் சுமையாக இருக்க வேண்டுமா? எமது எதிர்காலம் கேள்விக்குறிதானே? ஆகையால் நாம் படித்துத்தான் என்ன? படிக்காமல் விட்டால்தான் என்ன?'' என்ற கேள்விகளை மாணவர்கள் ஆசிரியர்களிடம் கேட்கின்றனர்.

வளர்ந்த நாடுகளில் பட்டத்தின் பின்னர் அல்லது உயர்கல்வியின் பின்னர் இன்னுமொரு வழிகாட்டல் உள்ளது. அத்தகைய நடைமுறை எமது நாட்டில் இல்லை. பட்டத்தின் பின்னர் தொழிலுக்காக அலையும் நிலை இங்கு உள்ளது.

அதிலும் பட்டதாரிகளாகி உரிய தொழில் இல்லாமல் இருப்பதென்பது படித்த கல்வியைப் பாழாக்கும் செயல் என்றே கருதப்படுகின்றது. பட்டதாரியாகி, அரச தொழில் தான் வேண்டும் என்று பட்டதாரிகள் கேட்பது முறையல்ல என்று பலர் கேட்கின்றனர்.

அப்படியானால் பட்டத்தின் பின்னர் செய்வதற்கான தொழிலை இதுவரை யாரும் காட்டவில்லை. அத்தகைய நிலை எமது நாட்டில் அறவே இல்லை.

ஆகையால் பட்டதாரிகளின் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர அனைவரும் விரைந்து செயற்பட வேண்டும். என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

# அ.தி.மு.க. மூன்றாகப் பிளவு! தமிழக அரசியலில் பரபரப்பு!

## இரு அணிகளின் இணைப்பு முயற்சியில் சசிகலா தம்பி திவாகரன்

சென்னை,ஜுன் 09

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு அ.தி.மு.கவில் புயல் வீசி வருகிறது. அ.தி.மு.க. அம்மா, அ.தி.மு.க. புரட்சித் தலைவி அம்மா என்று இரண்டாகப் பிரிந்த அ.தி.மு.க. தற்போது மூன்றாக உடைந்துள்ளது. அ.தி.மு.க. அம்மா அணியில் ஏற்பட்டுள்ள பிளவைத் தொடர்ந்து, முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான ஆட்சிக்குள் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அவரை ஆதரித்து வந்த 122, சட்டசபை உறுப்பினர்களில் 30 பேர் டி.டி.வி. தினகரனை ஆதரிக்கப் போகிறோம் எனத் தெரிவித்துள்ளனர்.

இதனால், அ.தி.மு.கவில் மட்டுமல்ல, அரசியல் வட்டாரத்திலும் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.



### சசிகலா மனமாற்றம்

அ.தி.மு.க. அம்மா அணியின் துணைப் பொதுச்செயலாளர் இரட்டை இலைச் சின்னம் பெற லஞ்சம் கொடுத்த வழக்கில், பிணை பெற்று திரும்பியதும், பெங்களூர் சிறையில் சசிகலாவைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார். பின்னர் அவர் பேசுகையில்- 'என்னை கட்சியில் இருந்து நீக்கும் அதிகாரம் சசிகலாவுக்கு மட்டுமே உள்ளது என்றும், 60 நாள்கள் காத்திருந்து கட்சி நடவடிக்கைகளை கவனிப்பேன்' என்றும் தெரிவித்திருந்தார்.

இதற்கிடையே, கட்சியின் பொதுச்செயலாளர் சசிகலா கட்சிப் பணிகளில் இருந்து ஒதுங்கி இருக்க விரும்புகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது. மேலும், கட்சி மற்றும் ஆட்சிப் பணியில் தன்னுடைய உறவினர்களின் தலையீடு இருக்கக் கூடாது என்று அவர் நினைக்கத் தொடங்கியிருக்கிறார் எனவும், கட்சி ஒற்றுமைக்காகச் சில நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டு இருக்கிறார் எனவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

### சசிகலா தம்பி முயற்சி



இந்தத் தகவலை உறுதிப்படுத்தும் வகையில், சசிகலாவின் தம்பி திவாகரன், ஓ.பன்னீர்செல்வம் அணியினருடன் கட்சி இணைப்புக்கான பேச்சை முன்னெடுத்து வருகிறார் என பரபரப்பான தகவல்கள் வெளியாகி உள்ளன.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவும் திவாகரன், ஓ.பன்னீர்செல்வம் மற்றும் எடப்பாடி பழனிச்சாமி அணியினருடன் பேசினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### ஓரிரு நாளில் தீர்வு

இந்த பேச்சின்போது இரு தரப்பிலும் திவாகரன் மத்தியஸ்தராக இருந்து எடப்பாடி பழனிச்சாமி, ஓ.பன்னீர்செல்வம் அணியை சேர்ந்த நிர்வாகிகளுக்கு நல்ல தீர்வு ஏற்பட வழிவகை செய்தார். இந்த பேச்சில் இரு தரப்பிலும் உடனுக்குடன் பல விடயங்கள் விவாதிக்கப்பட்டு, தீர்வு காணப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. எனவே சசிகலாவின் தம்பி திவாகரன் தலைமையில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் ஓரிரு நாள்களில் இணைப்புக்கான முடிவு எட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## அ.தி.மு.க. அமைச்சர்கள் எவரும் தினகரனை விமர்சிக்கக் கூடாது!

### முதல்வர் பழனிச்சாமி உத்தரவு



டி.டி.வி தினகரனை அ.தி.மு.க. அமைச்சர்கள் யாரும் விமர்சிக்கக் கூடாது என முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி உத்தரவிட்டுள்ளார்.

அ.தி.மு.க. அம்மா அணியில் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் டி.டி.வி. தினகரன் ஆகியோருக்கு இடையேயான மோதல் வலுத்து வரும் நிலையில், தினகரனுக்கு எதிராக அமைச்சர்கள் தொடர்ந்து கருத்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகமாகவே தினகரன் குறித்து அமைச்சர்கள் யாரும் கருத்துத் தெரிவிக்கக் கூடாது என முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி உத்தரவிட்டுள்ளார்.

எனவே இந்த உத்தரவின் மூலம், தினகரன் ஆதரவாளர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு இடையேயான கருத்து மோதல்கள் முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ச)

## மத்திய பிரதேசம் பாலகாட் மாவட்டத்தில்

## பட்டாசுத் தொழிற்சாலையில் தீ: 22 பேர் சாவு: 14 பேர் படுகாயம்!

மத்திய பிரதேசத்தின் பாலகாட் மாவட்டத்தில் உள்ள பட்டாசுத் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 22 பேர் உயிரிழந்துள்ளனர் 14 பேர் படுகாயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை ஏற்பட்ட இந்தத் தீ விபத்தின் போது, தொழிற்சாலைக்குள் 45 பேருக்கும் அதிகமானவர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளமையால், உயிரிழப்புக்கள் மேலும் அதிகரிக்கலாம் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. உயிரிழந்தவர்களில் அதிகமானவர்கள் பெண்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குத் தலா 2 லட்சம் ரூபா நிதி வழங்கப்படும் என மாநில அரசு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)



## அந்நிய செலாவணி மோசடி வழக்கு :

## தினகரன் மீது குற்றச்சாட்டு பதிவு!

அந்நிய செலாவணி மோசடி வழக்கில் அ.தி.மு.க. அம்மா கட்சி துணைப் பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் மீது எழும்பூர் பொருளாதார குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கை முன்னிட்டு டி.டி.வி. தினகரன் நீதிமன்றத்தில் நேரில் ஆஜரானார். தன் மீது தவறு ஏதும் இல்லை என அவர் தனது தரப்பு விளக்கத்தை முன்வைத்தார்.

இந்த வழக்கில் தினகரன் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன. அத்துடன், வழக்கின் அடுத்தகட்ட விசாரணையை எதிர்வரும் 22ஆம் திகதிக்கு ஒத்திவைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

அந்நிய செலாவணி மோசடியில் ஈடுபட்டனர் என சசிகலா, டி.டி.வி. தினகரன் ஆகியோர் மீது அமலாக்கத்துறை கடந்த 1996 ஆம் ஆண்டு 7 வழக்குகளைப் பதிவு செய்துள்ளது.

இந்த வழக்கு எழும்பூர் நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.

இந்நிலையில், கொடநாடு எஸ்டேட் பங்களாவை டோனிநிறுவனங்கள் மூலம் வாங்க முயன்றார் எனத் தொடரப்பட்ட வழக்கில் தினகரன் மீது எழும்பூர் நீதிமன்றம் குற்றச்சாட்டைப் பதிவு செய்துள்ளது. (ச)

## பொலிஸ் தடையை மீறிச் சென்ற ராகுல் கைது!

பொலிஸாரின் எச்சரிக்கையை மீறி மத்திய பிரதேச மாநிலத்தில் விவசாயிகள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட பகுதிக்குச் சென்ற காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி கைது செய்யப்பட்டுள்ளார்.

மண்ட்சவுர் மாவட்டத்தில் வன்முறைகள் கடந்த பகுதிக்குச் செல்ல முற்பட்ட வேளை விவசாயிகள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து குறித்த பகுதியில் வன்முறைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், நேற்று வியாழக்கிழமை காலை ராகுல்காந்தி அம்மாநிலத்துக்கு விஜயம் செய்தார்.

இந்தப் பகுதிக்குச் செல்ல ராகுல் காந்திக்கு அனுமதி மறுக்கப்பட்டது. எனினும் அதை மீறி அவர் செல்ல முற்பட்டுள்ளார். இதன் போதே அவரைப் பொலிஸார் கைது செய்தனர். கடந்த செவ்வாய்க்கிழமை பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மத்திய பிரதேச விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் போது இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தில் 5 விவசாயிகள் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஈரானால் சிறை பிடிக்கப்பட்ட 15 தமிழக மீனவர்கள் நாடு திரும்பினர்

ஈரான் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட 15 தமிழக மீனவர்கள் நேற்று வியாழக்கிழமை காலை தமிழகம் திரும்பியுள்ளனர். இதன் போது, சென்னை விமானநிலையத்தில் மீனவர்களை தமிழக மீன்வளத் துறை அதிகாரிகள் வரவேற்றுள்ளனர்.

இதன்போது நாடு திரும்பிய மீனவர்கள் தெரிவிக்கையில்- 'எல்லை தாண்டி வந்தோம் எனக் கூறி ஈரான் கடற்படையினர் எங்களைக் கைது செய்தனர். சில நாள்கள் கப்பலிலும், பின்னர், சிறையிலும் அடைத்தனர். எங்களுக்குத் தண்ணீர் மற்றும் உணவுகள் எதுவும் வழங்கப்படவில்லை' என்றனர்.


இராமநாதபுரத்தைச் சேர்ந்த 15 மீனவர்கள் கடந்த ஆண்டு டுபாய் நாட்டுக்கு மீன்பிடித் தொழிலுக்காகச் சென்றனர். எனினும் கடந்த டிசம்பர் மாதம் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டனர் எனக்கூறி ஈரான் கடற்படை இவர்களைக் கைது செய்தது.

இதனால் அதிர்ச்சியடைந்த மீனவர்களின் குடும்பத்தினர் அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய – மாநில அரசுகளுக்கு கோரிக்கை விடுத்திருந்தனர். இந்தநிலையில், மத்திய வெளியுறவுத்துறை அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்ததையடுத்து, ஈரான் கடற்படையால் சிறை பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் கடந்த சில தினங்களுக்கு முன் விடுதலை செய்யப்பட்டு டுபாயிலுள்ள இந்திய தூதரகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

# தென்கொரிய ஆதரவு நாடுகளை மிரட்டுவதற்கு மீண்டும் வடகொரியா ஏவுகணைச் சோதனை!

தென்கொரியா மற்றும் அதற்கு ஆதரவாகச் செயற்படும் நாடுகளை மிரட்டும் வகையில் தொடர்ச்சியாக ஏவுகணைச் சோதனைகளை நடத்தும் வட கொரியா நேற்று வியாழக்கிழமை மீண்டும் ஏவுகணைச் சோதனையை நடத்தியுள்ளது.

வடகொரியாவின் கடலோர நகரான வொன்ஸானிலிருந்து நேற்றுக் காலை அடுத்தடுத்து ஏவுகணைச் சோதனைகளை நடத்தியுள்ளது எனத் தென்கொரிய இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



இந்த ஏவுகணைகள் 200 கிலோமீற்றர் தூரம் சென்று கடலில் வீழ்ந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.



அமெரிக்கா மற்றும் தென்கொரிய கப்பல்களை அச்சுறுத்தும் வகையில் வடகொரியா இந்தச் சோதனையை மேற்கொண்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

ஐ.நா. பாதுகாப்புச் சபை புதிய தடைகளை விதித்து ஒருவாரத்தில் வடகொரியா மேற்படி ஏவுகணைச் சோதனையை நடத்தியுள்ளது. அத்துடன் அணுசக்தி மற்றும் ஆயுதத் திட்டங்கள் தாமதமின்றி தொடரப்படும் என்றும் வடகொரியா அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பிரித்தானியாவை ஆளப்போவது யார்? 650 தொகுதிகளுக்கு நேற்று வாக்குப் பதிவு!

## முடிவுகள் இன்று வெளியாகும்



கன்சர்வேடிவ் கட்சியின் ஆட்சியைத் தக்கவைப்பாரா பிரதமர் தெரேசா மே என்ற எதிர்பார்ப்புக்கு மத்தியில் பிரித்தானியாவில் 650 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு நேற்று வியாழக்கிழமை ஒரே கட்டமாக நடைபெற்றது.

தேர்தலில் வாக்களிக்க 46.9 மில்லியன் மக்கள் தகுதி பெற்றுள்ளனர். அந்தவகையில், நாடளாவிய ரீதியில் 40 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை 7 மணி முதல் வாக்குப்பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டன.

தேர்தல் இறுதி முடிவுகள் இன்று வெள்ளிக்கிழமை மதியத்துக்குள் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



பிரித்தானிய பொதுத் தேர்தல் 2020 ஆம் ஆண்டே நடைபெறவிருந்தது. ஆனால், பிரெக்சிற் குறித்த அதிகாரபூர்வ பேச்சு ஆரம்பிப்பதற்கு வலிமை வாய்ந்த, நிலையான தலைமை அவசியம் என்பதை வலியுறுத்தி பிரதமர் தெரேசா மே முன்கூட்டிய தேர்தலுக்கு அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



**பிரதமர் தெரேசா மே, தொழிற் கட்சித் தலைவர் ஜெரமி கோர்பின் வாக்களிப்பு**

பிரித்தானிய பொதுத் தேர்தலை முன்னிட்டு பிரதமர் தெரேசா மே பெக்சயர் தனது வாக்கைப் பதிவு செய்துள்ளார்.

அதேவேளை, தொழிற்கட்சித் தலைவர் ஜெரமி கோர்பின் வடக்கு லண்டனில் வாக்குப் பதிவு செய்துள்ளார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் கன்சர் வேட்டிவ் கட்சி மொத்தமுள்ள 650 இடங்களில் 331 இடங்களைக் கைப்பற்றி ஆட்சியைப் பிடித்தது.


தற்போது பன்முனை போட்டி நிலவினாலும் தெரசா மே சார்ந்திருக்கும் கன்சர்வேட்டிவ் கட்சிக்கும், எதிர்க்கட்சித் தலைவரான ஜெர்மி கோர்பிண் சார்ந்திருக்கும் தொழிலாளர் கட்சிக்கும் தான் பலத்த போட்டி நிலவுகிறது.

இதுவரை மக்களிடம் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பு முடிவுகள் பலவற்றில் தெரசா மே மற்றும் அவர் சார்ந்திருக்கும் கன்சர்வேட்டிவ் கட்சியும் தான் வெற்றி பெறும் எனத் தெரிவித்தனர்.

இந்தத் தேர்தல் பிரித்தானியாவில் மாத்திரமின்றி சர்வதேச ரீதியில் மிகப் பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. (ச)

# வழுக்கை தலையில் தங்கம்!

## மொசாம்பிக் நாட்டில் கொலை செய்யப்படும் ஆண்கள்!!



மொசாம்பிக் நாட்டில் வழுக்கை தலையாக இருக்கும் 3 ஆண்களின் தலையில் இருந்து தங்கம் எடுக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கின்றமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வழுக்கை தலையாக இருக்கும் ஆண்களின் தலையில் தங்கம் இருக்கும் என்ற மூட நம்பிக்கை மொசாம்பிக் நாட்டில் நிலவி வருகிறது.

அதிலும் குறிப்பாக மிலாங்கே மாவட்டத்தில் தான் தங்கம் எடுப்பதற்காக வழுக்கைதலை ஆண்கள் கொலை செய்யப்படுகின்றனர்.

இவ்வாறு கொலை செய்யப்பட்ட ஆண்களின் உடல் பாகங்கள் சடங்குகளில் பயன்படுத்தப் பட்டிருப்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதனால், வழுக்கைத் தலை ஆண்களை விழிப்புடன் இருக்குமாறு அந்த நாட்டுப் பொலிஸார் எச்சரிக்கைவிடுத்துள்ளனர். (ச)

# உக்ரைனில் உள்ள அமெ. தூதரகம் மீது குண்டு வீச்சு!

உக்ரைன் நாட்டில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மீது மர்ம நபர் ஒருவர் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்திய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உக்ரைன் நாட்டின் தலைநகர் கீவில் அமெரிக்கத் தூதரகம் அமைந்துள்ளது.

உயர் பாதுகாப்பு நிறைந்த இந்த அலுவலகத்தைக் குறிவைத்து நேற்று வியாழக்கிழமை அதிகாலையில் மர்ம நபர் ஒருவர் வெடிகுண்டை வீசி விட்டு தப்பிச் சென்றுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது. சேத விவரம் தொடர்பில் தகவல் எதுவும் வெளியாகவில்லை.(ச)


# தென்னாபிரிக்காவில் கடும் புயல் காற்று: 8 பேர் உயிரிழப்பு: பலர் இடம்பெயர்வு!

தென்னாபிரிக்க நகரான கேப்டவுனில் கடந்த இரு தினங்களாக வீசிய புயல் காற்று காரணமாக எட்டு பேர் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் இடம் பெயர்ந்து சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கேப்டவுன் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் மின்னல் தாக்கம் காரணமாக ஏற்பட்ட தீ விபத்தில் நால்வரும், மற்றுமொரு தீ விபத்தில் மூவரும், வீடு இடிந்து வீழ்ந்ததில் ஒருவரும் என எட்டு பேர் உயிரிழந்துள்ளனர் .

காற்று பலமாக வீசுவதால் தீ வேகமாக பரவுகிறது என தீயணைப்புத் தலைமை அதிகாரி ஒரு வர் தெரிவித்துள்ளார்.

மேலும், தீயைக் கட்டுப்படுத்துவதற்காக மேலதிகமாக தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.



தீ பரவல் காரணமாக 8 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரையிலான மக்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேப்டவுன் வறட்சி பேரழிவு பகுதியாக அறிவிக்கப்பட்டு இரண்டு வாரங்களில் மேற்படி புயல் காற்று மற்றுமோர் அழிவை ஏற்படுத்தியுள்ளது.

மேற்படி புயல் காற்று காரணமாக சில பகுதிகளில் 50 மில்லிமீற்றர் அளவில் மழை பெய்யும் என்றும் கடல் அலைகள் எழுச்சி பெறும் என்றும் தென்னாபிரிக்க வானிலை சேவைகள் மையம் எதிர்வு கூறியுள்ளது. (ச)

# சுசந்திகா ஒலிம்பிக் பதக்கத்தை ஏலத்தில் விட்டால் விளையாட்டுத்துறை அமைச்சு கொள்வனவு செய்யும்!



## பதக்கம் விற்பதைத் தடுக்கும் வகையில் இனி புதிய சட்டம் என்கிறார் அமைச்சர் தயாசிறி

லண்டன், ஜூன் 08

சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை சார்பில் போட்டியிட்டு வெற்றி பெறுபவர்களின் பதக்கங்கள் நாட்டிற்கானதாகும் வகையில் புதிய சட்டம் கொண்டு வரப்பட வேண்டும். அப்போது பதக்கங்களை விற்பனை செய்வதைத் தடுக்க முடியும் என விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அரசு என்ற வகையில் சுதந்திகாவுக்குத் தேவையான அனைத்தையும் செய்துள்ளது. சுசந்திகா ஜயசிங்க ஒலிம்பிக் பதக்கத்தை ஏலத்தில் விட்டால் விளையாட்டுத்துறை அமைச்சு அதனைக் கொள்வனவு செய்யும். அதில் எவ்விதமான பிரச்சினையும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவுக்கும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் தயாசிறி ஜயசேகர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''விளையாட்டுத்துறை அமைச்சின் ஆலோசகராக சுசந்திகா ஜயசிங்க இணைத்துக் கொள்ளப்பட்டு அவருக்கு மாதம் 60 ஆயிரம் சம்பளமும், 15 ஆயிரம் எரிபொருள் கொடுப்பனவும் வழங்கப்பட்டுவருகிறது.

இதே போன்று விளையாட்டுத்துறைக்கு பொறுப்பாக இருந்த முன்னைய அமைச்சர்களும் பலவேறு வகையில் அவருக்குப் பொறுப்புக்களைத் தந்து அதற்கான கொடுப்பனவுகள் மற்றும் சம்பளம் என்பவற்றை வழங்கி இருந்தனர்.

மேலும், இராணுவம் அவருக்கு மாதம் 60 ஆயிரம் ரூபா வழங்குகின்றது.

இந்நிலையில் அரசே, அமைச்சோ தனக்கு ஒன்றுமே செய்யவில்லை என சுசந்திகா ஜயசிங்க கூறுவதில் உண்மை யில்லை.

அதே போன்று அவருக்கு வழங்கப்படுகின்ற சம்பளமும் நிறுத்தப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது. அதிலும் எவ்விதமான உண்மையும் இல்லை.

தனக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களுக்கான மாத அறிக்கையைச் சமர்பிக்க வேண்டியது அமைச்சின் ஆலோசகர் என்ற வகையில் அவரது கடமையாகும்.

அமைச்சின் ஆலோசகர் எனும்போது அவர் அரச அதிகாரியாக கருதப்படுகிறார். ஆனால், தனது கடமைகளைச் செய்யாமல் அமைச்சுக்கு எதிராக போலிப் பிரசாரம் செய்வதில் எவ்வித நியாயமும் இல்லை.

தமயந்தி தர்ஷா மற்றும் சுசுத் உள்ளிட்ட பலர் பொதுநலவாய விளையாட்டு போட்டிகளிலும், ஆசிய போட்டிகளிலும் பதக்கங்களை வென்றுள்ளனர். இவர்கள் யாரும் தங்களுக்கு அரசு ஒன்றும் செய்யவில்லை என பொது இடத்தில் கோஷம் எழுப்பவில்லை.

ஆனால், சுசந்திகா ஜயசிங்க இவ்வாறு கூறுகின்றமை வேதனையாக உள்ளது. அரசு என்ற வகையில் அவருக்குச் செய்ய வேண்டிய கடமைகள் அனைத்தையும் செய்துள்ளது.

அவரைச் சர்வதேச போட்டிகளுக்கு தயார்ப்படுத்துவது முதல் இன்று வரை பல கோடிகளை செலவிட்டுள்ளது. எனவே, எமக்கு எவ்விதமான பிரச்சினையும் இல்லை. சுசந்திகா ஜயசிங்க ஒலிம்பிக் பதக்கத்தை ஏலம் விட்டால் விளையாட்டுத்துறை அமைச்சு அதனைக் கொள்வனவு செய்யும். அதில் எவ்வித பிரச்சினையும் இல்லை.

ஆனால், இவ்வாறான செயற்பாடுகளை தடுப்பதற்காக புதிய சட்டத்தின் அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது. சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை சார்பில் போட்டியிட்டு வெற்றிபெறுபவர்களின் பதக்கங்கள் நாட்டிற்கானவை என்ற வகையில் அந்தச் சட்டம் அமையப் பெற வேண்டும்.

அதனூடாக பதக்கங்களை விற்பனை செய்வதைத் தடுக்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.

**25 கோடிக்கு விற்பனை யாகும் பதக்கம்**

இதேவேளை, தனது ஒலிம்பிக் பதக்கத்தை கொள்வனவு செய்ய வெளிநாடுகளில் இருந்து அதிக அளவிலான கோரிக்கைகள் கிடைத்துள்ளன என்று சுசந்திகா ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

தனது பதக்கத்தை 25 கோடி ரூபாவுக்கும் அதிகமான விலையில் விற்பனை செய்ய முடியும் எனவும் அவர் நம்பிக்கை கொண்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த பதக்கத்தின் பெறுமதியை உலகம் அறிந்து கொண்டுள்ள போதிலும் இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சர் அறிந்து கொள்ளாமை குறித்து வருத்தமடைகிறேன்.

இந்தப் பதக்கம் இந்த அளவு பெறுமதியானதென நான் அறிந்து கொள்ள முடிந்தமை குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

அதற்கமைய இந்தப் பதக்கத்தை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் பணத்தில் விளையாட்டு துறை அமைச்சரின் எதிர்கால தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த முடியும். அத்துடன், இலங்கையின் விளை யாட்டுத் துறையை வளர்ப் பதற்கு கூட என்னால் நிதி வழங்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




# ஜெயசூரியாவின் ஆபாச வீடியோ தொடர்பில் காதலி விளக்கம்!

கொழும்பு, ஜூன் 09

இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திர வீரர் ஜெயசூரியா தனது முன்னாள் காதலியுடன் இருப்பது போன்ற ஆபாச வீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு ஜெயசூரியாவுக்கும், மொடலும் நடிகையுமான மாலிகா ஸ்ரீசேனாவுக்கும் தொடர்பு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாகத்தான் ஜெயசூரியா, தனது இரண்டாவது மனைவியான சந்திரா டிசில்வாவை விவாகரத்துச் செய்தார் என்று தகவல்கள் வெளியாகின.

மாலிகா ஸ்ரீசேனாவும், ஜெயசூரியாவும் கோயிலில் ரகசியத் திருமணம் செய்து கொண்டனர் என்றும் கூறப்பட்டது. ஆனால் மாலிகா ஸ்ரீசேனா ஒரு தொழிலதிபரை மணந்து, படங்களில் நடிக்கத் துவங்கினார்.

இந்த நிலையில், இலங்கையின் அரசியல் வாதி ஒருவர் கிளப்பிய பிரச்சினை காரணமாக இந்த ஆபாச வீடியோ வெளியிடப்பட்டுள்ளது எனவும் இந்த வீடியோ தன்னைப் பழிவாங்கவே ஜெயசூரியா வெளியிட்டுள்ளார் என்றும் அவரது முன்னாள் காதலி விளக்கம் அளித்துள்ளார்.

# விமர்சனங்களுக்கு பதிலடி கொடுத்தது பாகிஸ்தான் அணி!

லண்டன், ஜூன் 09

இந்திய அணியுடனான முதல் போட்டியில் படுதோல்வியடைந்திருந்த பாகிஸ்தான் அணி, பலரதும் விமர்சனங்களை எதிர் கொண்ட நிலையில், தென்னாபிரிக்க அணியுடனான போட்டியில் பீனிக்ஸ் பறவையாக மீண்டெழுந்து வெற்றியைப் பதிவு செய்து தமக்கான அரையிறுதி வாய்ப்பைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

தென்னாபிரிக்காவுடனான போட்டியில் தோல்வியுற்றதால் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரிலிருந்து வெளியேற வேண்டும் என்ற கடும் அழுத்தத்துக்கு மத்தியில், வாழ்வா சாவா என்ற சூழ் நிலையில் பாகிஸ்தான் இந்தப் போட்டியில் களமிறங் கியது.



பர்மிங்காம், எஜ்பாஸ்டனில் நடைபெற்ற இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சி யில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி, பாகிஸ்தான் அணியை இலகுவாக வெற்றி கொள்ளலாம் என்று முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. அந்த வகையில் களமிறங்கிய அவ்வணியை பாகிஸ்தான் பந்து வீச்சாளர்கள் அதிர்ச்சிக்கு உள்ளாக்கினர்.

தமது பந்து வீச்சின் மூலம் உலகின் தலை சிறந்த ஒருநாள் துடுப் பாட்ட வீரர் ஏபி டி வில்லியர்ஸ் மற்றும் ஹசிம் அம்லா உள்ளடங்கலாக அனைவரையும் திணற டித்த பாகிஸ்தான் வீரர்கள் தென்னாபிரிக்க அணியை வெறும் 210 ஓட்டங்களுக்குள் மடக்கியது. இதில் குறிப்பாக டி வில்லியர்ஸ் 5 பந்துகளை எதிர்கொண்டு ஓட்டமெதுவும் பெறாமலே ஆட்டமிழந்து சென்றார்.

ஹசிம் அம்லா மற்றும் குவிண்டன் டி கொக் ஆகியோர் இலங்கை அணியுடனான கடந்த போட்டியைப் போன்றே சிறந்த ஆரம் பத்தைப் பெற்றுக்கொடுக் கும் நோக்கில் முதல் விக் கெட்டுக்காக சிறந்த 40 ஓட்டங்களைத் தங்களுக் கிடையே இணைப்பாட் டமாக பகிர்ந்து கொண்டனர். மொஹமட் ஹபீஸ் தனது சுழல் பந்து வீச்சி னால் குவிண்டன் டி கொக்கை ஆட்டமிழக்கச் செய்து, பாகிஸ்தான் அணியை அச்சுறுத்தி இந்த இணைப்பாட்டதை முறித்து விக்கெட் வேட் டையை ஆரம்பித்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து நீண்ட நாள்களுக்குப் பின்னர் அணிக்குத் திரும் பியிருந்த மொஹமட் ஆமீர் மற்றும் ஜுனைத் கான் ஆகியோர் நேர்த்தியாகப் பந்து வீசி ஓட்டங்களைக் கட்டுப்படுத்தி அதிக அழுத்தத்தைக் கொடுத் திருந்தனர்.

அதிரடியாக பந்து வீசிய ஹசன் அலி 24 ஓட்டங் களை மாத்திரம் கொடுத்து டு ப்லெசிஸ், ஜேபி டுமினி மற்றும் வெய்ன் பார்னெல் ஆகியோரை சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்ட மிழக்கச் செய்தார்.

இதனால், முதல் 28 ஓவர் களுக்குள் 118 ஓட்டங்க ளுக்கு 6 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது தென்னாபிரிக்க அணி. பின்னர் டேவிட் மில்லர் தனியொருவராக இறுதி வரை போராடி ஆட்டமிழக் காமல் 75 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டு அணியைச் சரிவில் இருந்து மீட்டார்.

ஹசிம் அம்லாவின் விக் கெட்டை 16 ஓட்டங் களுக்கு வீழ்த்திய இமாட் வசிம் 20 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுக ளையும், ஸ்விங் மற்றும் யோக்கர் பந்து வீச்சினால் அச்சுறுத்திய ஜுனைத் கான் 53 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுக ளையும் வீழ்த்தினார்.

அந்த வகையில், 50 ஓவர்கள் நிறைவில் தென்னாபிரிக்க அணி 8 விக்கெட் இழப்பிற்கு 219 ஓட்டங்களை பாகிஸ்தான் அணிக்கு வெற்றி இலக் காக நிர்ணயித்தது.

அதனைத் தொடர்ந்து களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்காக கடும் அழுத் தத்துக்கு மத்தியில் அசார் அலி மற்றும் பாக்ஹார் ஸமான் ஆகியோர் முதல் விக்கெட்டுக்காக 40 ஓட் டங்களைப் பெற்று சிறந்த ஆரம்பத்தைக் கொடுத் தனர்.

நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய அசார் அலி 22 பந்துகளை எதிர் கொண்டு 9 ஓட்டங் களுக்கும், அதிரடியாக துடுப்பாடிய பாக்ஹார் ஸமான் 23 பந்துகளில் 6 பவுண்டரிகள் உள்ளடங் கலாக 31 ஓட்டங்களுக்கும் ஆட்டமிழந்து சென்றனர். மொஹமட் ஹபீஸ் நிதான மாகத் துடுப்பாடி 56 பந்து களில் பெறுமதியான 26 ஓட்டங்களைப் பெற்று அணிக்குப் பங்களிப்புச் செய்தார்.

பாபர் அசாம் மற்றும் பாகிஸ்தான் அணியின் பினிஷர் சொஹைப் மலிக் ஆகியோர் ஆட்டமிழக் காமல் முறையே 31 மற்றும் 16 ஓட்டங்களுடன் களத் திலிருந்தபோது, 27 ஆவது ஓவரில் மழையின் குறுக் கீட்டால் போட்டி இடை நிறுத்தப்பட்டது. இதன் போது பாகிஸ்தான் 7 விக் கெட்டுகள் கைவசமுள்ள நிலையில் அணி 23 ஓவர்க ளில் 119 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை யில் இருந்தது.

ஐ.சி.சி. விதிகளின் படி, 20 ஓவர்களுக்கு மேல் பந்து வீசப்பட்டிருந்தமை யால் பாகிஸ்தான் அணி டக்வார்த் லூயிஸ் முறைப் படி 19 ஓட்டங்களால் வெற்றி பெற்றதாக அறி விக்கப்பட்டது.

போட்டியின் ஆட்ட நாயகனாக மூன்று விக்கெட் டுகளை வீழ்த்திய ஹசன் அலி தெரிவானார்.

சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளில் இதுவரை நடைபெற்ற போட்டிகளில் விறுவிறுப்பான ஒரு போட்டியாகவும் முழு கிரிக்கெட் உலகையும் திரும்பிப் பார்க்க வைத்த ஒரு போட்டியாகவும் இந்த ஆட்டம் இருந்தது.

கடந்த இந்திய அணியுடனான போட்டியின் தோல் விக்குப் பின்னர் பல இன்னல் களைச் சந்தித்த பாகிஸ்தான் அணியும் படுதோல்வி யினால் சோகத்தில் ஆழ்ந்த பாகிஸ்தான் கிரிக்கெட் ரசி கர்களும் இந்த வெற்றி மூலம் புத்துயிர் பெற்றுள் ளார்கள் என்றே கூறவேண்டும்.

இந்த வெற்றியினால் 'பி' குழுவில் பெரிய மாற்றங் களைக் காணக்கூடியதாக உள்ளது.


# பிரெஞ் ஓபன் டென்னிஸ் போட்டித் தொடர்: முர்ரே - வாவ்ரிங்கா அரையிறுதியில் மோதல்!

பாரிஸ், ஜூன் 09

பிரெஞ் ஓபன் டென்னி ஸின் அரை இறுதியில் உலகின் முதல் நிலை வீரரான ஆண்டி முர்ரேவும் மூன்றாம் நிலை வீரரான வாவ்ரிங்காவும் மோதுகின் றனர்.

உலகின் இரண்டாம் நிலை வீரரான ஜோகோவிச் (செர்பியா) காலிறுதியில் ஆஸ்திரிய வீரர் டொமினிக் கிடம் அதிர்ச்சிகரமாகத் தோற்றார்.

உலகின் முதல் நிலை வீரரான ஆண்டி முர்ரே,



ரபெல் நடால், வாவ்ரிங்கா ஆகியோர் காலிறுதியில் வென்று அரை இறுதிக்குத் தகுதி பெற்றனர்.

ஒரு அரை இறுதியில் உலகின் முதல் நிலை வீரரான ஆண்டி முர்ரே (இங்கிலாந்து)- மூன்றாம் நிலை வீரரான வாவ்ரிங்கா (சுவிற்ஸர்லாந்து) மோது கிறார்கள்.

மற்றொரு அரை இறுதி யில் 9 முறை சம்பியனும், 4 ஆம் நிலை வீரருமான ரபெல் நடால் (ஸ்பெயின்)- டொமினிக் மோதுகிறார்கள்.

பெண்கள் அரை இறுதி போட்டிகளில் ஹெலப் (ருமேனியா)- பிளிஸ் கோவா (செக்கு டியரசு) ஒஸ்டா பென்கோ (லாத் வியா)- பாசின்ஸசி (சுவிற்ஸர் லாந்து) மோதுகிறார்கள்.


# பந்துவீச்சாளர்களை நினைத்து மோர்கன் பெருமிதம் அடைகிறார்!

கார்டிப், ஜூன் 09

சம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியின் நியூஸிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் இங்கிலாந்து அணியின் பந்து வீச்சு பிரதானமாக இருந்ததாக அணித் தலைவர் மோர்கன் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது துடுப்பாட்டம் பரவாயில்லை. ஆனால், முதல் பாதி ஆட்டம் எங்க ளுக்கு முழு திருப்தி அளிக் கவில்லை. ஏனெனில், எதிர்பார்த்ததை விட 20



முதல் 30 ஓட்டங்கள் குறைவாக எடுத்து விட் டோம். அதே சமயம் பந்து வீச்சாளர்கள் தங்கள் பணியைக் கச்சிதமாகச் செய்து காட்டினர்.

ஒருங்கிணைந்து அற்பு தமாக செயற்பட்டனர். இந்த ஆட்டத்தில் பந்து வீச்சுத்தான் பிரதானமாக இருந்தது' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஞானசார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞானசார தேரர் பொலிஸாரின் கண்களில் தென்படாமல் மறைந்திருக்கின்றார் என்றால், அதுவும் ஒரு திறமை. இவ்வாறு மறைந்திருப்பதற்கு அமைச்சர்கள் யாருடையதாவது ஒத்துழைப்பு இல்லாதிருக்க முடியாது.

ஞானசாரதேரர் முஸ்லிம்களுக்கு எதிராகப் பயன்படுத்துகின்ற வசனங்களை அவர் குற்றம் சாட்டும் நபர்கள் சிங்களவர்களுக்கு எதிராக எந்தவொரு மோசமான வார்த்தையையும் கூறியதில்லை.

ஞானசார தேரர் குற்றம் சாட்டும் எவரும் கடைகளுக்குத் தீ வைத்ததாகவோ, சமயத் தலங்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவோ, ஆதாரங்களோ, சாட்சிகளோ இல்லை.

வட மாகாண முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரனுக்கு அவரது தேவைகளை, கோரிக்கைகளை முன்வைக்க உரிமை இருக்கின்றது. அவர் ஞானசார தேரரைப் போன்று செயற்படவில்லை. ஞானசார தேரர் கூறும் நபர்களைக் கைது செய்வதற்கோ விசாரணை நடத்துவதற்கோ எந்தவிதத் தேவையும் இல்லை. – என்றார். (இ)

## மீனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாக தற்போது மீன் உற்பத்தி குறைந்துள்ளது. அதனால்நுகர்வோருக்குஅவசியமான மீனை சலுகை விலையில் பெற்றுக்கொடுப்பதை நோக்காகக் கொண்டு இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சுவிடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இறக்குமதி செய்யப்படும்சீனிக்கானவிசேட பண்டவரி கடந்த செவ்வாய்க்கிழமை முதல் ஒரு கிலோவுக்கு 10 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டது. ஏற்கனவே, அறவிடப்பட்ட 13 ரூபா வரி செவ்வாய்க்கிழமை முதல் 23 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டனர்.

மூன்று மாத காலத்திற்கு முன்னர் இந்தக் குடும்பத்தினர் பாலையூற்றுப் பகுதியில் வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து அங்கு குடியேறியுள்ளனர். அயல் வீட்டாருடன் தமது குழந்தையின் மூலமாக நட்புறவைச் சம்பாதித்து சந்தேகம் ஏற்படாதவாறு சகஜமாகப் பழகிவந்தனர். திருமண வீடொன்றிற்குச் செல்வதற்காக நகை தேவைப்படுவதாக அயல் வீட்டாரை ஏமாற்றி கைமாற்றாக வாங்கிக்கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

தப்பிச் சென்ற அந்தக் குடும்பத்தினரை நேற்றையதினம் நாவற்குழிப்பகுதியில்வைத்துக் கைது செய்ததாகப் பொலிஸார் கூறினர்.

இவர்கள் இவ்வாறான குற்றச் செயல்களில் நீண்டகாலமாக ஈடுபட்டு வந்தனர் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்தது.

இவர்கள் இருவரையும் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது கணவனும் மனைவியும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களது குழந்தை நீதிமன்ற உத்தரவின் பேரில் சிறுவர் பராமரிப்பு நிலையம் ஒன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (இ)

## திருமுருகன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ழர் தாயகத்தில் தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுக்கும் என, அக்கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

சென்னையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை முன்னெடுக்க முற்பட்ட திருமுருகன் காந்தி உட்பட அவருடன் இணைந்த தொண்டர்கள் அனைவரையும் விடுதலைசெய்யவலியுறுத்திநேற்று யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர்மேலும் கருத்துக்கூறுகையில்,

திருமுருகன் காந்தி இந்தியாவில் மாத்திரமல்லாது உலக நாடுகளிலும், ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையிலும் ஈழத் தமிழர்களின் போராட்டத்திற்காககுரல்கொடுத்துவந்தவர்.

வல்லரசு நாடுகள் அனைத்தும் சேர்ந்து ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையிலே இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசத்தை வழங்கி, ஈழத் தமிழர்களுக்கு துரோகம் இழைக்கின்ற வகையிலான நாடகத்தை அரங்கேற்றிய போது அதன் உண்மையை வெளியே கொண்டுவந்தவர் திருமுருகன் காந்தி.

இன்று அவர் குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இது கண்டிக்கப்படவேண்டியது.

ஈழத்தமிழர்களின் போராட்ட வரலாற்றில் மே17 இயக்கமும் பதிவுசெய்யப்படவேண்டியது. அந்தஇயக்கத்ததின்செயற்பாடு தமிழர்களுக்கு சார்பாக அமைந்தது. அதனாலேயே அதன் தலைமை ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை விடுதலை செய்யுமாறு நாம் தமிழக அரசைக் கோருகின்றோம். அவரின் விடுதலை உறுதிப்படுத்தப்படும் வரை எமது போராட்டம் தொடரும்.– என்றார். (ம)

## விசாரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விசாரணை அறிக்கை பொது வெளியில் முழுமையாக முதலமைச்சரால் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்று வடக்கு சிவில் சமூகத்தைச் சேர்ந்த அதிபர்கள், மருத்துவர்கள், மனித உரிமை சட்டத்தரணிகள் குறிப்பிட்டனர்.

அத்துடன், அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதற்கு அமைவாக உரிய நடவடிக்கைகளை முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தாமதமின்றி எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த காலங்களில் பல்வேறு விசாரணைக் குழுக்களின் அறிக்கைகள் பகிரங்கப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மத்திய அரசால் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளின் அறிக்கைகளைப் பகிரங்கப்படுத்தக் கோரும் வடக்கு அரசியல் தலைமைகள், தம்மால் முன்னெடுக்கப்பட்ட விசாரணை அறிக்கைகளைப் பகிரங்கப்படுத்த பின்நிற்கக்கூடாது என்றும் சிவில் சமூகத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனால் நியமிக்கப்பட்ட குழு என்ற அடிப்படையில், இந்தக் குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவது அவரது பொறுப்பே என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (இ)

## 24 மணிநேர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லங்களில் ஏழு பேர் உயிரிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை அனுராதபுரம் – கவரக்குளம் வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று 'கப்' ரக வாகனம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் உயிரிழந்துள்ளார்.

அதேபோன்று, கும்புக்கெடே பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. இதன்போது, 72 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கெஸ்பேவ பிரதான வீதியில் லொறி ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திய நபர் உயிரிழந்துள்ளார். அனுராதபுரம் பகுதியில் இடம்பெற்ற மற்றுமொரு விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கஹவத்தை – வெல்லந்துர பிரதேசத்தில் ஓட்டோ, வீதியோரத்தில் நின்ற பெண் ஒருவருடன் மோதி விபத்துக்குள்ளானதில் அந்தப் பெண் உயிரிழந்துள்ளார். அத்துடன், தெஹிவளை மற்றும் பேலியகொடை பகுதியில் ரயிலில் மோதி இருவர் உயிரிழந்துள்ளனர். (இ–ச)

## ரூ.60...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளது.

கல்கிஸைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து, நேற்றுக் காலை முதல் அப்பகுதியில் விசேட சோதனை நடவடிக்கைகளும், இரகசியக் கண்காணிப்பு நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்பட்டிருந்தன.

இந்த நிலையில் தசேரம் மாவத்தை வழியாக சந்தேகத்துக்கிடமான முறையில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் சென்றுகொண்டிருந்த நபர் ஒருவர் தடுத்து நிறுத்தப்பட்டார். அவரைச் சோதனையிட்டபோது போதைப்பொருள் இருப்பது தெரியவந்தது.

சந்தேக நபரைக் கைது செய்த பொலிஸார், அவரிடமிருந்த போதைப் பொருள் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றையும் கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருளின் சந்தைப் பெறுமதி அறுபது இலட்சம் ரூபாவுக்கும் அதிகம் என்று தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிஸைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (இ–ச)

## படிப்பறிவற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் பொருளாதார விவகார அமைச்சும் இணைந்து மேற்கொண்ட ஆய்வில் இந்தத் தகவல் தெரிய வந்துள்ளது.

நாட்டில் பாடசாலை செல்ல வேண்டிய மாணவர் பருவத்திலுள்ள 4 லட்சத்து 52 ஆயிரத்து 661 பிள்ளைகள் உள்ளனர். அவர்களில் மேற்கூறப்பட்ட எண்ணிக்கையானோர் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை.

முழு இலங்கையும் ஒரு குடியாகக் கொள்ளப்பட்டு கடந்த 2016 ஆம் ஆண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 5 வயது முதல் 17 வரையாவனவர்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். (ம)

# சுகாதார அமைச்சர் ராஜிதவுக்கு எதிராக ஜனாதிபதி மைத்திரியிடம் முறைப்பாடு

### அரச மருத்துவர்கள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 09

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராக ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்யவுள்ளதாக அரச மருத்துவர்கள் சங்கம்நேற்று அறிவித்துள்ளது.

அரசாங்க மருத்துவர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் மருத்துவர் நவீன் டி சொய்சா இது தொடர்பாக நேற்று ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்,

சுகாதார அமைச்சர் என்ற வகையில் அமைச்சர் ராஜித சேனாரத்ன உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டுதல்களை மீறி நடந்து கொள்கின்றார். அரசாங்க மருத்துவர்கள் சங்க பிரதிநிதிகளை கிஞ்சித்தும் மதிப்பதில்லை.

புதிய மருத்துவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நேற்றைய (நேற்று முந்தினம்) நிகழ்வின் போதும் அரசாங்க மருத்துவர்கள் சங்கப் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. இதுவரை காலமும் இருந்து வந்த நடைமுறையை அமைச்சர் ராஜித சேனாரத்ன மீறியுள்ளார்.

எனவே, அவருக்கு எதிராக ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்யத் தீர்மானித்துள்ளோம். – என்றார்.

எனினும், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் நெருக்கமான உறவைப் பேணுகின்றது எனவும், அதனாலேயே மகிந்த ராஜபக்ஷவை ஆட்சியில் இருந்து விரட்ட பாடுபட்ட ராஜித சேனாரத்ன மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றது எனவும் சில தரப்புக்கள் குற்றம் சுமத்தியுள்ளன. (ம)

## ஜி.எஸ்.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுபான்மையினருக்கு எதிராகக் குறிப்பாக முஸ்லிம்களுக்கு எதிராக அதிகரித்து வரும் வன்செயல்கள் தொடர்பாக தாம் மிகவும் கரிசனை கொண்டுள்ளார் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகள் தொடர்பில் நர்ங்கள் மிகுந்த கரிசனை கொண்டுள்ளோம்.

இந்தச்செய்தியைஅரசாங்கத்துக்கும் மிகத் தெளிவாக நாம் வெளிப்படுத்தியுள்ளோம். அவர்கள் இது விடயத்தில் நடவடிக்கை எடுப்பதுடன் எந்த மதமாக இருப்பினும் இனமாக இருப்பினும் அதனைப் பொருட்படுத்தாது சட்டத்தின் ஆட்சியானது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும், குற்றம் இழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும் எனவும் அழுத்திக்கூறியுள்ளோம். அதுதான் பிரதானமான செய்தியாகும்.

ஜி.எஸ்.பி. பிளஸ் என்பது ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்கப்படும் ஒருதலைப்பட்சமான வரிச் சலுகையாகும்.

நாங்கள் கொடுக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை.இது தாராளமனத்துடனான சலுகையாகும். இந்த தாராளச் சலுகையிலிருந்து இலாபத்தைப்பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் இலங்கை ஐ.நாவில் கைச்சாத்திட்டுள்ள சாசனங்களுடன் இணங்கிச் செல்லவேண்டும்.

நீங்கள் கையொப்பமிட்டதையே நடைமுறைப்படுத்த வேண்டும். பாரதூரமான மீறல்கள் இடம்பெறுமானால் அது திரும்பப் பெறப்படலாம். இது ஒருமுறை இலங்கைக்கு நடந்துள்ளது.

எனவே, அரசாங்கம் அது வழங்கிய சொந்த வாக்குறுதிகளை மிகவும் கடுமையாக நடைமுறைப்படுத்தியாகவேண்டும். எதிர்காலம் தொடர்பாக அனுமானிக்க நான் விரும்பவில்லை.

எனினும், ஜி.எஸ்.பி. பிளஸை வழங்குவதற்காக விதிக்கப்பட்ட நிபந்தனைகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டுமென்பதே எனது நிலைப்பாடு. நீங்கள் மாற்றங்களை நடைமுறைப்படுத்தியாக வேண்டும் அது தெளிவான செய்தியாகும். – என்று தூதுவர் ஜோன் ஒட்கே கண்டிப்புடன் கூறியுள்ளார்.

இதேவேளை, ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை வழங்கியிருந்தாலும் இலங்கையைத் தாங்கள் தொடர்ந்து கண்காணிப்பர் என ஐரோப்பிய யூனியன் ஏற்கனவே தெரிவித்திருந்தது.

இலங்கையில், ஜனநாயக நிலைமை, நல்லாட்சி மற்றும் மனித உரிமைகள் நிலைவரம் ஆகியவை தொடர்பாகச் செயற்பாட்டுக் குழுக்கள் மூலம் தொடர்ந்து தகவல் திரட்டப்பட்டு அவை மீளாய்வு செய்யப்பட்டு அதற்கேற்பவே ஜி.எஸ்.பி. சலுகை தொடர்பான முடிவுகள் எடுக்கப்படும் என, சர்வதேச வர்த்தகம் மற்றும் வர்த்தக ஒப்பந்தங்களுக்கான ஐரோப்பிய ஆணையாளர் மல்ட்ஸ்ரோம் தெரிவித்திருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## ரயிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிச் சென்ற கடுகதி ரயிலில் மோதுண்டு இந்தநபர் உயிரிழந்துள்ளார்.

கொட்டாஞ்சேனைப்பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதான இஷான நிரங்க பெரேரா என்பவரே இச் சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

விபத்துக் குறித்து தெஹிவளைப்பொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் (இ–ச)

## காங்கேசன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்த உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை சிமெந்து ஆலையின் இயந்திர சாதனங்கள் வெட்டி எடுக்கப்பட்டு பழைய இரும்பாக பல கோடி ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டமை தொடர்பிலேயே இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த மோசடி தொடர்பில் முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்நாயக்கவிடம் நேற்றுமுன்தினம் விசாரணை நடத்தப்பட்டிருந்தது.

இதன்போது சாட்சியமளித்த தயா ரத்நாயக்க, தமது உத்தரவை மீறி இயந்திர சாதனங்கள் வெட்டப்பட்டுபழைய இரும்புக்கு விற்பனை செய்யப்பட்டன என்று வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

அதனடிப்படையில், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபயராஜபக்ஷஉள்ளிட்ட சில முன்னாள் உயர் படையதிகாரிகளிடம்விசாரணைநடத்தப்பட உள்ளது. (மற்றொரு செய்தி 05 ஆம் பக்கத்தில்) (இ–ச)

# வாழைப்பழத்துக்கும் எனக்கும் எந்தவித தொடர்பும் இல்லை!

### கயந்த கருணாதிலக கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 09

பொதி செய்யப்பட்ட மூன்று வாழைப்பழத்திற்கும் எனக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை. அதில் எனது படத்தை திட்டமிட்டு ஒட்டி போலியான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று அமைச்சரவை இணை பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வெள்ள அனர்த்தத்திற்குள் சில மோசமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மூன்று வாழைப்பழத்திற்கும் எனக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை. போலியான பிரசாரத்திற்காக எனது பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது.





பொது மக்களுக்கு உண்மையான நிலை தெரியும்.

எனவே, தான் குற்றப் புலனாய்வு பிரிவில் முறைப்பாடு செய்து நடவடிக்கை எடுக்குமாறு கோரினேன். சம்பந்தப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அரசில் உள்ளவர்களை குறி வைத்து இவ்வாறான போலி பிரசாரங்களை முன்னெடுப்பது அவர்களின் பணியாக உள்ளது. முக்கியமான குடும்பத்தின் புதல்வரே இதனைச் செய்துள்ளார்.

இதற்கென மத்திய நிலையம் ஒன்றும் வைத்துள்ளார். முகநூல் ஊடாகவும் ஏனைய சமூக வலைத்தளங்களூடாகவும் அமைச்சர்களுக்கு எதிராகவும் அரசுக்கு எதிராகவும் போலி பிரசாரங்களை பரப்புவது இவர்களின் பணியாக உள்ளது.

இது மிகவும் மோசமான நிலையாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனர்த்தங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவியாக வாழைப்பழங்களை பொதியிட்டு அதில் தனது புகைப்படம் மற்றும் பெயரைக் குறிப்பிட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் கயந்த கருணாதிலக கடந்த சில தினங்களுக்கு முன்னர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடொன்றை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நாளை மின் தடை

உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ்.பிரதேசத்தில் நாவாந்துறை, மீனாட்சிபுரம் வீதி, முத்தமிழ் வீதி, வில்லூன்றி, பண்ணைப் பிரதேசம், துரையப்பா விளையாட்டரங்கு, நுணாவில், கைதடி, நாவற்குழி, மறவன்புலோ, தச்சன்தோப்பு, தனங்களப்பு, கோகிலாக்கண்டி, கேரதீவு வீதி, அறுகுவெளி, புன்னாலைக்கட்டுவன், குரும்பசிட்டி, பலாலி, மயிலிட்டி, தையிட்டி, வறுத்தலைவிளான், வீமன்காமம், பலாலி விமானப்படை முகாம், பலாலி இராணுவ முகாம், பலாலிவிமானப்படைவிடுதி, மயிலிட்டி 515ஆவது இராணுவ முகாம், விக்ரமாராச்சி பிரைவேற் லிமிற்ரெட், பனைவள ஆராச்சிநிலையம், கைதடியுனைரட் மோட்டார்ஸ், கைதடி வடமாகாண சபை அலுவலகம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (இ)

## புதிய அரசியல் கட்சிகளின் பதிவு மேலும் தாமதமாகும்!

### தேர்தல்கள் ஆணையாளர் கூறுகின்றார்



கொழும்பு, ஜூன் 09

புதிய அரசியல் கட்சிகளின் பதிவுகள் பற்றிய நேர்முகப் பரீட்சைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால் அக்கட்சிகளின் பதிவுகள் பற்றிய அறிவிப்பு மேலும் தாமதமாகும் என்று தேர்தல்கள் ஆணையகத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

95 புதிய அரசியல் கட்சிகள் பதிவுகளுக்காக விண்ணப்பம் செய்திருந்தன எனவும், அவற்றின் பதிவுகள் பற்றிய அறிவிப்பு மே மாதம் 31 ஆம் திகதி வெளியிடப்படும் எனவும் தேர்தல்கள் ஆணையகம் முன்னர் தெரிவித்திருந்தது.

எனினும், இந்த அறிவிப்பு மேலும் காலதாமதமாகும் என தேர்தல்கள் ஆணையகத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய இப்போது அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அதிரடிப் படையினரால் முறியடிக்கப்பட்டது மஹிந்தவுக்கான பிரசார நடவடிக்கை!

கொழும்பு, ஜூன் 09

பிரார்த்தனை நிகழ்வு ஒன்றின்போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்காக மேற்கொள்ளப்பட்ட பிரசார நடவடிக்கை ஒன்று அதிரடிப் படையினரால் தடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக உயிரிழந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்காக பிரார்த்தனை செய்யும் நிகழ்வு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்றது.

ஆயிரம் தேரர்களின் பங்கேற்புடன் பிரித் பாராயண நிகழ்வு கடந்த ஆறாம் திகதி சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தினால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



எனினும் இந்நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பிரசாரம் தேடும் நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆனால், சிறப்பு அதிரடிப் படையினரின் தலையீட்டால் அது முறியடிக்கப்பட்டுள்ளது.

பிரித் பாராயண நிகழ்வின் போது, மஹிந்த ராஜபக்ஷவின் புகைப்படம் பொறிக்கப்பட்ட அப்பியாசக் கொப்பிகள் பகிரும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. எனினும் அந்தத் திட்டம் கடைசி நேரத்தில் முறியடிக்கப்பட்டுள்ளது. (க)

## 7 மாவட்டங்களுக்குமான மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிப்பு!

கொழும்பு, ஜூன் 09

ஏழு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இரத்தினபுரி, கேகாலை, காலி, களுத்துறை, மாத்தறை, ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கே மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டங்களின் மலைப்பாங்கான பகுதிகள், சரிவுகளில் வாழும் மக்கள் விழிப்புடன்இருக்க வேண்டும் என தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் குறிப் பிட்டுள்ளது.

## மாத்தளையில் எந்த நேரத்திலும் இடிந்து விழும் அபாயத்தில் 30 வீடுகள்!

கொழும்பு, ஜூன் 09

மாத்தளையில் 30 வீடுகள் எந்நேரமும் இடிந்து விழக் கூடிய அபாய நிலையில் காணப்படுகின்றன என்று பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

பல்லேபொல பிரதேசத்தின் எஹலேபொல, பரணகம பகுதியிலுள்ள 30 வீடுகளின் தரைகளிலும் சுவர்களிலும் பெரும் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன.

அந்த வீடுகளே எந்நேரமும் இடிந்து விழக்கூடிய நிலையில் காணப்படுகின்றன என்று பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர். 150 குடும்பங்கள் வாழும் இந்தக் கிராமத்திலுள்ள 30 வீடுகளில் இந்த வெடிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்றும் மழை தொடர்ந்தால் இந்த அபாயம் மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

இந்த அபாயத்தால் அப்பகுதியிலுள்ள ஒருசில குடும்பங்கள் வீடுகளை விட்டு வெளியேறவும் முடிவு செய்திருக்கின்றன என்றும் தெரிய வருகின்றது. (க)

## நாளுக்கு நாள் ஏறும் தேங்காய் விலை

தென்மராட்சிப் பகுதியில் தேங்காயின் விலை என்றுமில்லாவாறு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கடந்த சில நாள்களாக 40 ரூபா, 45ரூபாவாக விற்பனையான தேங்காய் தற்போது 50, 60 ரூபாவாக உயர்ந்துள்ளது.

இதேவேளை சந்தைகளிலும் மரக்கறிவகைகளின் விலைகளும் உயர்ந்த நிலையிலேயே விற்பனையாகி வருகின்றன. (இ-45)

## ஐவருக்கு குருத்துவ திருநிலைப்படுத்தல்

யாழ்ப்பாணம்,ஜூன் 09

யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த திருத் தொண்டர்கள் ஐவருக்கு குருத்துவத் திருநிலைப்படுத்தல் நிகழ்வு, எதிர்வரும் 15 ஆம்திகதி வியாழக்கிழமை யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இடம்பெறும்.

யாழ். ஆயர் யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் இவர்கள் ஐவரும் திருநிலைப்படுத்தப்படுவர். (இ)

## நவீல்ட் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன் 09

நவீல்ட் செவிப்புலனிழந்தோர் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் பொன்விழாவும் வருடாந்த பொதுக் கூட்டமும் நாளைசனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் நாவலர் வீதியிலுள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறும். (இ)

# நேற்றைய தேர்க் காட்சிகள்...



யாழ்ப்பாணம், நீராவியடி விரகத்தி விநாயகரின் தேர்த் திருக்காட்சி...



வேலணை மேற்கு பெரியபுலம் மகாகணபதிப்பிள்ளையார் ஆலய தேர்த் திருவிழாவின் அருட் காட்சி...

# சிறுநீரக நோயாளர்களின் கொடுப்பனவு அதிகரிப்பு!

## இதுவரை ரூ.3 ஆயிரம், இனி ரூ.5 ஆயிரம்

கொழும்பு, ஜூன் 09

சிறுநீரக நோயாளர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் மாதாந்தக் கொடுப்பனவை அதிகரிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

அந்த நோயாளர்களுக்கு தற்போது 3 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றது. இதனை மேலும் 2 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார். இதன்படி சிறுநீரக நோயாளர்களுக்கு மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட குடும்பங்களிலுள்ள சுமார் 20 ஆயிரம்பேருக்கு அரசாங்கத்தால் இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகிறது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம)

# செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்கு செயலாளரை உடன் நியமியுங்கள்!

## அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை

வவுனியா - செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்கு பிரதேச செயலாளர் ஒருவர் நியமிக்கப்படவேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

செட்டிகுளம் பிரதேச செயலாளராகப் பணியாற்றியவர் பணி நீக்கம் செய்யப்பட்ட நிலையில், உதவிப் பிரதேச செயலாளரே தற்போது பிரதேச செயலாளராகக் கடமையாற்றி வருகின்றார்

இந்நிலையில் நீண்ட காலமாக பிரதேச செயலாளர் இன்றி செயற்படும் செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்கு நிரந்தரமாக பிரதேச செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்றும் பிரதேச வாசிகளின் தேவைகளைப் பூரணப்படுத்த உள்நாட்டலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (இ-100)




# கட்டார் நெருக்கடி காரணமாக சுற்றுலாத்துறையில் தாக்கம் வரும்!

## அமைச்சர் ஜோன் அமரதுங்க கூறுகிறார்



கட்டார் அரசுக்கு எதிராக எழுந்துள்ள நெருக்கடி நிலைமை காரணமாக இலங்கையின் சுற்றுலாத்துறையில் பெரும் தாக்கம் ஏற்படலாம் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது:-

கட்டார் பயங்கரவாதத்திற்கு ஆதரவாக செயற்பட்டுவருவதாக தெரிவித்து சில நாடுகள் கட்டாருடனான இராஜதந்திர உறவைத் துண்டித்துள்ளன. இது இலங்கையில் நிச்சயமாக தாக்கம் செலுத்தும். எனவே, இலங்கைக்கு ஏற்படவுள்ள தாக்கத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கட்டார் நாட்டுக்கான விமான சேவையினால் இலங்கைக்கு பெரும் தொகை நிதி கிடைக்கப்பெற்றது. அந்நாட்டில் எழுந்துள்ள இந்த நெருக்கடி நிலைமை மேலும் அதிகரிக்குமாயின், அந்நாட்டிலுள்ள இலங்கைத் தொழிலாளர்கள் திரும்பிவிட வேண்டி ஏற்படும். இதனால், இலங்கையின் அந்நியச்செலாவணி வீழ்ச்சியுறும்.

ஒரு லட்சத்து 40 ஆயிரம் இலங்கையர்கள் கட்டாரில் உள்ளனர். கடந்த 2 வருடங்களில் சவுதிக்கு அடுத்தபடியாக அதிகமான இலங்கையர்கள் தொழிலுக்காக கட்டாருக்கே சென்றுள்ளனர் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-ச)

# சாவகச்சேரி சந்தையில் சைக்கிள் திருட்டு

சாவகச்சேரி, ஜூன் 09

சாவகச்சேரி பொதுச் சந்தையில் நேற்றுக் காலை சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது.

சைக்கிள் உரிமையாளர் சைக் கிளை நிறுத்தி விட்டுத் திறப்பை எடுக்கத் தவறியதை அவதானித்தவர் அதனைத் திருடிச்சென்றுள்ளார்.

பத்து நிமிடம் கழித்து வந்து பார்த்தபோது சைக்கிள் திருடப்பட்டமை தெரியவந்துள்ளது. கச்சாய் புங்கடிப் பகுதியைச் சேர்ந்த ஒருவருடைய சைக்கிளே திருட்டுப் போயுள்ளது. (இ-21)

# சங்கானையில் இன்று சாரதிகளுக்கான கருத்தமர்வு

சங்கானை, ஜூன் 09

வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வாகன சாரதிகளுக்கான சாரத்தியம் தொடர்பான கருத்தமர்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம், 12 மணிவரை சங்கானை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து அமைச்சின் அனுசரணையில் இக்கருத்தமர்வு இடம்பெறவுள்ளது.

சங்கானை பிரதேச செயலகத்திற்குட்பட்ட சகல சாரதிகளும் இதில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மோட்டார் வாகனப் பிரிவினர் கேட்டுள்ளனர். (இ-ரி)

# பொலன்னறுவை பொசன் அன்னதான நிகழ்வு 57 ஆவது முறையாக ஜனாதிபதி தலைமையில்!





பொலன்னறுவை பௌத்த சங்கத்தினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் பண்டாரநாயக்க-சேனாநாயக்க பொசன் அன்னதான நிகழ்வு 57 ஆவது முறையாக நேற்று வியாழக்கிழமை பிற்பகல் பொலன்னறுவை பராக்கிரம சமுத்திர வளாகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஆரம்பமானது.

மஹிந்த தேரர் இலங்கைக்கு வருகை தந்த பொசன் பௌர்ணமி தினத்தை நினைவுகூரும் வகையில், வரலாற்று முக்கியத்துவம்மிக்க இடங்களை பார்வையிட வரும் இலட்சக்கணக்கான பக்தர்களுக்கு பொலன்னறுவை பௌத்த சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனையின் பேரில் இந்த அன்னதான நிகழ்வு வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படுகிறது.

மகா சங்கத்தினருக்கு அன்னதானம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதியின் தலைமையில் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது. சங்கைக்குரிய லியங்கஸ்வகுரே தேவானந்தநாயக்க தேரரினால் அனுசாசன் உரை நிகழ்த்தப்பட்டது.

நாடெங்கிலும் இருந்து பொலன்னறுவைக்கு ஆயிரக்கணக்கான மக்கள் இந்நிகழ்வுக்கு வருகை தந்திருந்தனர், அவர்களுக்கான உணவை பகிர்ந்தளிக்கும் நிகழ்விலும் ஜனாதிபதி கலந்துகொண்டார். இந்த அன்னதான நிகழ்வு இன்றும் நாளையும் இரவு, பகல் நிகழ்வுகளாக இடம்பெறும்.

இந்த நிகழ்வில் வடமத்திய மாகாண முதலமைச்சர் பேசல ஜயரட்ண, நாடாளுமன்ற உறுப்பினர் சிறிபால கம்லத், நாலக்க கொலன்னே ஆகியோர் கலந்துகொண்டனர். (இ-ச)